பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 03 வெள்ளிக்கிழமை (19.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 296

# வன்னியில் மனிதப் பேரவல நெருக்கடி; இணைத் தலைமைகள் அவசர கூட்டம்

## அடுத்த வாரம் நியூயோர்க்கில் நடத்த ஏற்பாடு

கொழும்பு, செப்ரெம்பர் 19

இலங்கையில், குறிப்பாக வன்னியில், மனிதாபிமான விவகாரங்கள் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கின்றன எனக் கருதும் இணைத் தலைமை நாடுகள், அவை குறித்து ஆராய்வதற்காக அவசரக் கூட்டம் ஒன்றை அடுத்த வாரத்தில் நியூயோர்க்கில் நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே இந்தக் கூட்டம் அவசர அவசரமாக அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் செயற்பட்ட சர்வதேச - உள்நாட்டுத் தொண்டர் அமைப்புகள் மற்றும் ஐ.நா. நிறுவனங்களை குறுகிய கால அறிவித்தலோடு அங்கிருந்து அவசர அவசரமாக வெளியேற்றிய கொழும்பு அரசின் நடவடிக்கையாலும் - அப்பிரதேசங்களில் வெடித்திருக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது புதன் இரவில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, செப்.19

சரசாலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து சுமார் 10 நிமிடங்கள் அந்தப் பகுதியில் தொடராக வேட்டுச் சத்தங்கள் கேட்டன. இச் சம்பவத்தில் படைத்தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் இன்று வெளியாகும்; யாழ். வெட்டுப்புள்ளி 117

கொழும்பு, செப். 19

கடந்த ஒகஸ்ட் மாதம் பதினேழாம் திகதி நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் இன்று வெளியாகும். பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் மூலம் இத்தகவல் தெரியவந்தது. (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக் களமுனைகள் பலவற்றில் புலிகள்–படையினர் உக்கிரச் சமர்!

கிளிநொச்சி, செப்.19

வன்னிக்களமுனைகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றும் பல இடங்களில் உக்கிர சமர்கள் இடம்பெற்றுள்ளன.

விடுதலைப் புலிகளின் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்குடன் இராணுவத்தினர் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

வன்னேரிக்குளம் பகுதி நோக்கி நேற்றுக்காலை பெருமெடுப்பில் இராணுவம் முன்னேற முயன்றவேளையில் அங்கு இரு தரப்புகளுக்கும் இடையே போர் மூண்டது. ஏறக்குறைய நான்கு மணித்தியாலயங்கள் நடந்த இந்தச் சண்டையில் குறைந்தது 22 படையினர் கொல்லப்பட்டனர். நாற்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் என்று விடுதலைப் புலிகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆண்டுகளுக்குள் கொழும்பு சென்றோர் பொலிஸில் கட்டாயம் பதிவு செய்யவேண்டும்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, செப். 19

கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் கொழும்பு மற்றும் மேல் மாகாணத்திற்கு வந்து தங்கியிருக்கும் வடபகுதியைச் சேர்ந்த சகல பொதுமக்களும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தத்தமது பொலிஸ் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஏ–9 வீதி புதூர்ச் சந்தியில் பயணிகள் பஸ் மீது கிளைமோர் தாக்குதல்; பொதுமக்கள் மூவர் பலி!

### ஆழ ஊடுருவும் படையினரின் கைவரிசையா?

கிளிநொச்சி, செப். 19

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஏ- 9 வீதியில் புளியங்குளம், புதூர் சந்தியில் நேற்றுக்காலை 7.45 மணியளவில் பயணிகள் பஸ்ஸை இலக்குவைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் குறித்த பஸ்ஸின் சாரதி உட்பட அப்பாவிப் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டனர். மேலும் நால்வர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகக் கொண்டுவரப்பட்டனர்.

ஏ-9 வீதியூடாக கிளிநொச்சி சென்றுகொண்டிருந்த பஸ்ஸே இவ்வாறு கிளைமோர்த் தாக்குதலுக்கு இலக்கானது.

கொல்லப்பட்டவர்களில் (12ஆம் பக்கம் பார்க்க)

## உணவு லொறிகள் மீதும் வன்னியில் ஷெல் வீச்சு!

கிளிநொச்சி, செப். 19

வன்னிமக்களுக்கான அவசர மனிதாபிமான உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடாக அங்கு சென்று (12ஆம் பக்கம் பார்க்க)

## நாச்சிக்குடா வலைப்பாட்டில் 4 மணி நேரம் கடற் சண்டை

கொழும்பு, செப். 19

நாச்சிக்குடா கடற்பகுதியில், வடக்கே வலைப்பாட்டில் கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நேற்று முற்பகல் 11.30க்கு ஆரம்பமான கடற் சமர் மாலை 4மணி வரை தொடர்ந்ததாக கடற்படை அறிவித்துள்ளது.

இந்த மோதலில் கடற்புலிகளின் 10 படகுகளை அழித்ததாகவும் அவற்றில் மூன்று பெரியன என்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்றைய கடற்சமரில் 25தொடக்கம் 30புலிகள் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்றும் நான்கு கடற்படையினர் காயமடைந்தனர் என்றும் படைத்தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்புத் தகவல்கள் நேற்று இரவு வரை வெளியாகவில்லை.

(அ-01)

### இதுவரை மொத்தம் 7 சடலங்கள் கண்டெடுப்பு

## புங்குடுதீவு, நெடுந்தீவுக் கரைகளில் நேற்று மூன்று சடலங்கள் ஒதுங்கின

### தமிழகத்திலிருந்து திரும்பிவந்த அகதிகளுக்கு நேர்ந்த பரிதாபம்!

யாழ்ப்பாணம், செப். 19

புங்குடுதீவில் ஆண் ஒருவரின் சடலமும் நெடுந்தீவில் ஒரு குழந்தை மற்றும் சிறுமி ஒருத்தியின் சடலங்களும் நேற்றுக் கரை ஒதுங்கியுள்ளன.

கடந்த சில தினங்களாக நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில் கரை ஒதுங்கிய 7 சடலங்களும் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தவர்களுடையன என்பது உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த 11 ஆம் திகதி அகதிகளுடன் புறப்பட்ட படகு (12ஆம் பக்கம் பார்க்க)




சூரியன் FM ( யாழ்ப்பாணம் 93 MHz ) ஊடாக
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியை சனிக்கிழமை
காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை நீங்கள் ...

## உங்கள் கதைகளைக் கேளுங்கள்

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களைத் தாங்கி வருகின்றது " மீண்டும் வாழ்வோம் ".
இது உங்கள் கதைகளை சொல்லும் நிகழ்ச்சி

தொடர்புகளுக்கு : மீண்டும் வாழ்வோம் 1039 கொழும்பு

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனுஷ்கோடியில் படகு கவிழ்ந்த பின்னர் நீந்திக் கரைசேர்ந்த படகோட்டி கைது!

இராமேஸ்வரம், செப். 19

தனுஷ்கோடிக் கடலில் படகு மூழ்கிப் பலியான அகதிகளை ஏற்றிச்சென்ற படகோட்டியைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மண்டபத்திலிருந்து செப்ரெம்பர் 12ஆம் திகதி நாட்டுப்படகில் திருட்டுத்தனமாக அகதிகள் இலங்கை சென்றபோது தனுஷ்கோடிக் கடலில் படகு கவிழ்ந்ததில் இரண்டு குழந்தைகள் உட்பட ஏழு பேர் இறந்தனர்.

உயிர்தப்பிய ஆறு பேரில் மூவரை இந்தியக் கடற்படையினர் மீட்டனர். நீந்திக் கரை சேர்ந்து தலைமறைவான சுமன் என்பவரைக் கியூப் பிரிவுப் பொலிஸார் கடந்த செவ்வாயன்று கைதுசெய்தனர். படகோட்டி மற்றும் அகதிகளை அனுப்பிவைத்த முகவர் முருகன் ஆகியோரைப் பொலிஸார் தீவிரமாகத் தேடிவந்தனர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை தங்கச்சிமடம் கடற்கரைப் பகுதியில் ரோந்து சென்ற மண்டபம் கடலோரக் காவல்படைப் பொலிஸார் தங்கச்சி மடம் மாந்தோப்பு தெருவைச் சேர்ந்த ஆரோக்கியதாஸ் (வயது - 32) என்பவரைப் பிடித்தனர்.

விசாரணையில் இவர் கடலில் மூழ்கிய அகதிகளைத் திருட்டுத்தனமாக இலங்கைக்குப் படகில் ஏற்றிச் சென்றதை ஒத்துக் கொண்டதால் அவரைப் பொலிஸார் கைது செய்து விசாரித்துவருகின்றனர். (அ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா மகேஸ்வரி

ஒட்டுவெளி, மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா மகேஸ்வரி நேற்று (18.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆறுமுகம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லையாவின் (மனேச்சர்) அன்பு மனைவியும், அருணாசலம், கனகம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), சரவணமுத்து, பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருவாதவூரர் (முன் னாள் காசாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), காலஞ் சென்ற மாணிக்கவாசகர் ஆகியோரின் சகோதரியும், சிவப்பிர காசம், மகாலட்சுமிதேவி (ஆசிரியை, கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்), அருந்ததிதேவி (நெசவு ஆசிரியர், மந்துவில்), சந்திரசோதி, தேவகி (சுவிஸ்), தவப்பிரகாசம் (UN-WFP) ஆகியோரின் பாசமிகு தாயும், பூமணி, வரதராஜா, யோகராஜா, ஜெயக்குமார் (சுவிஸ்), கோமதி (ஆசிரியை:, நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் குபேரன், வித்தியா, நிபுணன், கஸ்தூரி, துளசி, கெளசிகன், துஷ்யந்தி, சிந்துவராகி, பூரணன், சிந்துமை, ஆஞ் ஜெயன், ஆயிழை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சங்கவி, இளங்கீரன் ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலைஅனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.57கச்சேரி கிழக்கு ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.* (78582)

தகவல்:
பிள்ளைகள்.

## உள்ளூராட்சி மறுசீரமைப்பு கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், செப்.19

உள்ளூராட்சி திணைக்களங்கள் பொது மக்களுக்கு வழங்கும் சேவைகள் தொடர்பாகவும் உள்ளூராட்சி மறு சீரமைப்பு கண்காணிப்பு தொடர்பானதுமான கருத்தரங்கொன்று இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை கொடிகாமம் தலைமைப் பணி மனையில் உள்ளூராட்சித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி க.இராசையாவினால் நடத்தப்படவுள்ளது.

இந் நிகழ்வு சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (1-231)

## தவறிவிட்டது

*ஆழ்வாப்பிள்ளை சசிகரன் என்பவரது தே. அ. அட்டையும் (831453796V) கை பையும் அன்னை புத்தக சாலைக்கும் வைத்தியசாலைக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.*
*தொடர்பு:- 0212229384, 0775196397*

## தேவை

அனைத்து வெதுப்பாக உள் வேலையும், மெசினறி வேலையும் தெரிந்த அனுபவம் உள்ள வேலையாள்கள் தேவை. நேரில் சமூகம் தரவும் சந்திக்கும் நேரம்:- காலை 9 - நன்பகல் 12 மணிவரை
**காங்கேயன் வெதுப்பகம்,**
**கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.**

## சேவைகள்

சத்தியப்பிரமாணம் பெற்ற ஆங்கில மொழி பெயர்ப்பு, ஆங்கில தட்டச்சு, சமாதான நீதிவான் சேவைகள் பெற்றுக் கொள்ளலாம்.
**நாதன் கொமினிக்கேசன்,**
**பிரதான வீதி, பருத்தித்துறை.**

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, செப்.19

சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி மைதானத்தில் இடம் பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* **13 வயதுப்பிரிவு** - அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி.
* **16 வயதுப்பிரிவு** - சுழிபுரம் விக்ரோரியாக்கல்லூரி எதிர் அராலி கிழக்கு அ.மி.த.க பாடசாலை
* **18 வயதுப்பிரிவு** - வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி. (1-86)

## இணைப்பு பெற்ற ஆசிரியர் சம்பளம்

யாழ். கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான செப்ரெம்பர் மாதச் சம்பளம் வழங்கப்படவிருக்கின்றது.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை எதிர் வரும் 24 ஆம் திகதிக்கு முன் சம்பளப்பட்டியலில் கையொப்பம் இடுமாறு வலயக்கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (1)

## மரணஅறிவித்தல்

### கந்தையா சந்திரசேகரா

(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

பூநகரி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் அல்லாரை தெற்கு, கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சந்திரசேகரா 17.09.2008 புதன்கிழமை அன்று வவுனியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோமளேஸ்வரியின் அன்புக் கணவரும் கந்தையா காலஞ்சென்ற இராசம்மாவினதும் அன்னலட்சுமியினதும் அன்பு மகனும், சியாமளா (ஆசிரியை), மேனகா (பிரான்ஸ்), அனுஷா (ஆசிரியை, வவுனியா விபுலானந்தாக் கல்லூரி), பாரதி (ஓமான்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலகிருஷ்ணன், மோகனதாஸ் (பிரான்ஸ்), குகானந்தன் (ஆசிரியர், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), சுகந்தன் (பொறியியலாளர், ஓமான்) ஆகியோரின் அன்பு மாமனாரும் மகாதேவா, மகாலிங்கம் (நோர்வே), பத்மநாதன் (கனடா), நவீந்திரராஜா (ராசா- நோர்வே), சிவமலர் (கனடா), கோமளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.09. 2008) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வவுனியா - 0245683963*
*அல்லாரை தெற்கு,*
*கொடிகாமம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

# யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
# 17ஆம் ஆண்டு நிறைவு விழா அழைப்பு

| | | |
|---|---|---|
| காலம் | :- | இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை |
| நேரம் | :- | மு.ப. 11.30 மணி |
| இடம் | :- | சங்கத் தலைமைக் காரியாலயம் (559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) |
| பிரதம விருந்தினர் | :- | திரு.ம.பிரதீபன் (திட்டப்பணிப்பாளர், புனர்வாழ்வு புனரமைப்பு, மாவட்ட செயலகம்) |
| கௌரவ விருந்தினர்கள் | :- | திரு.S.ரவீந்திரா (முகாமையாளர், இலங்கை வர்த்தக வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்) |
| | | திரு.V.S. முதலி (முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்). |

**அன்னத்து அங்கத்தவர்களையும், முன்னாள் அங்கத்தவர்களையும் மு.ப. 11 மணிக்கு சமுகமளித்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.**

559, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

நன்றி

செயலாளர்.

## வாழ்த்துச் செய்தி

எமது சங்கத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விழா தருணத்தில் எமது சங்கத்தை வாழ்த்துவதில் நாம் பெருமை கொள்கிறோம். எமது சங்கம் மேன் மேலும் வளர்ந்து வெள்ளி, பொன், நூற்றாண்டு விழாக்களை கொண்டாட வாழ்த்தி நிற்கின்றோம்.

**யாழ்., தென்மராட்சி, நல்லூர், கோப்பாய், சங்கானை,**
**சண்டிலிப்பாய், காரைநகர், வடமராட்சி, உடுவில்,**
**தெல்லிப்பளை கிளைகள் சார்பாக.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொண்ட 13 பேருக்கு அதற்கான உறுதிகள் கிடைக்கும்

யாழ்ப்பாணம்,செப்.19

சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துகொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 13 பேருக்குச் சுய தொழில் மற்றும் முறைசாராத் தொழில்களின் பயனாளிகளுக்கான அரச உத்தரவாதமளிக்கப்பட்ட மாதாந்த ஓய்வூதிய உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பயனாளிகளுக்குப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயனாளிகள் 60 வயதைப் பூர்த்தி செய்த பின்னர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகைமை பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்வரும் பயனாளிகளைத் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாலிங்கம் இளங்குமரன் - மட்டுவில் தெற்கு, தர்மகுலசிங்கம் ரசனிகா - மந்துவில் கிழக்கு, பாலசுந்தரம் இந்திரபாமா - எழுதுமட்டுவாழ் வடக்கு, வல்லிபுரம் மகாலட்சுமி - மறவன்புலோ, ரவீந்திரன் தனலட்சுமி - மறவன்புலோ, ஐயாத்துரை கணேஸ்வரராணி - மட்டுவில் தெற்கு,

தர்மலிங்கம் சந்திராதேவி - கல்வயல், சிறிதரன் சுபாசினி - மந்துவில் கிழக்கு, செல்வநாயகம் ரஞ்சிதமலர் - மந்துவில் கிழக்கு, இராசையா குலேந்திரன் - கற்குளி முதலாம் ஒழுங்கை, கந்தசாமி வரதலட்சுமி - கெற்பேலி மேற்கு, மயில்வாகனம் தர்மரூபி - நுணாவில் மேற்கு, சண்முகம் வடிவழகன் - நுணாவில் கிழக்கு. (203-207)




## உயர்தொழில்நுட்ப நிறுவன மீள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,செப்.19

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் சகல கற்கை நெறிகளுக்குமான மீள்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு இயக்குநர் கே.கதிரமலை தெரிவித்துள்ளார்.

அத்துடன் எச்.என்.டி.எம்.மாணவர்களுக்கான உள்ளகப் பயிற்சி சான்றிதழ்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், பதிவாளருடன் தொடர்புகொண்டு அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் அவர் மேலும் கூறியுள்ளார். (203)

# காலபோக விதைப்பு வேலைகள் ஆரம்பம்; பசளை வகைகள் விநியோகிக்கப்படவில்லை

## புழுதி விதைப்பு மேற்கொள்ளமுடியாது விவசாயிகள் சிரமம்

யாழ்ப்பாணம்,செப்.19

இவ்வருட காலபோக நெற்செய்கைக்கான விதைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இதுவரை மானிய விலையிலான அடிக்கட்டுப் பசளை வகைகள் இன்னும் விநியோகிக்கப்படவில்லை. இதனால் புழுதி விதைப்பு மேற்கொள்ள முடியவில்லையென நெற்செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மொட்டைக்கறுப்பன், 500-1 போன்ற நான்கு மாத நெல்லின விதை நெல் கமநல சேவைகள் நிலையத்தினால் வழங்கப்பட்டன.

இவற்றுக்குரிய மானிய விலையிலான உரவகைகள் விநியோகிக்கப்படாததால் விதைப்பு வேலைகளை மேற்கொள்ளமுடியவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை தென்மராட்சி தெற்கு, மறவன்புலோ, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு, கைதடி - நாவற்குழி, நெணியான் ஆகிய பகுதிகளில் உள்ள நெல்வயல்களில் புழுதி விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அடிக்கட்டு உர வகைகள் போடாத நிலையில் விதைப்புகள் இடம்பெற்று வருகின்றன.

சில நெற்செய்கையாளர்கள் தனியார் கடைகளில் அடிக்கட்டுப் பசளைகளைக் கொள்வனவு செய்து பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர். (203-207)

## கமத்தொழில் காப்புறுதிச் சபையின் அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.19

நல்லூர் கமநலசேவை கட்டடத்தில் இதுவரை காலமும் இயங்கிவந்த கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் 127, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள யாழ். ப.நோ.கூ. சங்கத்தின் அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வருகின்றது என்று கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபை உதவிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (203)

# உள்ளூராட்சி மறுசீரமைப்புத் தொடர்பாக சபைகளின் முன்னேற்றம் கண்காணிப்பு

மானிப்பாய்,செப்.19

உள்ளூராட்சி மறுசீரமைப்புத் தொடர்பாக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் முன்னேற்றம் கண்காணிப்புச் செய்யப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சகல பிரதேச சபை, நகர சபை செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் சம்பந்தமான மறுசீரமைப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்புச் செய்து அதன் முன்னேற்ற அறிக்கைகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மேற்படி கண்காணிப்பு நடவடிக்கைக்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் குழு இம்மாத இறுதியிலும் அடுத்த மாத முற்பகுதியிலும் யாழ்ப் பாணத்திற்கு வருகை தரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (203-95)

## சர்வோதய அறங்காவலர் ஜமுனாதேவியின் பொன்விழா இன்று புங்குடுதீவில்

யாழ்ப்பாணம்,செப்.19

வட இலங்கை சர்வோதய அறங்காவலரும் சிறந்த சமூக சேவகியுமான செல்வி பொன்.ஜமுனாதேவியின் பொன்விழா நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கா.குகபாலனின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொள்கிறார்.

கௌரவ விருந்தினராகப் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் வி.சிவசாமி, வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபால், வேலணை கல்விப்பணிப்பாளர் வ.இராதாகிருஸ்ணன், வேலணைப் பிரதேச சபைச் செயலர் கை.மகேந்திரலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்வர்.

சிவஸ்ரீ நாகேந்திரக்குருக்கள், கியூடெக் இயக்குநர் சி.ஜோ.ஜெயக்குமார் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெறும். புங்குடுதீவுக் கிராமத்தில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பன்னிரண்டு மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களும் விழாவில் வழங்கப்படவுள்ளன. (அ-1)





வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த 11ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் க.கணேஷ், வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும் கலாநிதி த.கலாமணி நிறுவுநர் நினைவுப் பேருரையாற்றுதையும் முதல் மூன்று படங்களிலும் வாழ்வக மாணவனொருவரது நடன நிகழ்வை அடுத்துள்ள படத்திலும் காணலாம். *(படங்கள்: குமரன்)*

## பருத்தித்துறை தபால்நிலைய கருமபீடங்கள் இடமாற்றம்

பருத்தித்துறை தபால் நிலையத்தில் இயங்கிவந்த கருமபீடங்கள் யாவும் தபால் நிலையத்தின் கிழக்குப்புற வாசலுக்கு மாற்றப்பட்டுள்ளன.

தும்பளை வீதி, இரண்டாம் குறுக்குத் தெரு வீதிச் சந்தியில் அமைந்துள்ள தபால் நிலையத்தின் கருமபீடங்கள் யாவும் தும்பளை வீதியுடன் அமைந்திருந்த தெற்குப்புற வாசலில் இயங்கி வந்தன. தற்போது இக்கருமபீடங்கள் இரண்டாம் குறுக்குத்தெருவுடன் இணைந்துள்ள கிழக்குப்புற வாசலுக்கு மாற்றப்பட்டு செயற்பட்டு வருகிறது. (203-236)

# மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக நின்றுவிடாது சமூக அபிவிருத்திக்கு ஏற்பவும் செயற்படவேண்டும்

## பல்கலைக்கழகத் துணைவேந்தர் கருத்து



யாழ்ப்பாணம்,செப்.19

மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக வகுப்பறைக் கல்வியுடன் நின்றுவிடாமல் மக்களின் வாழ்வுக்கும் சமூகத்தின் அபிவிருத்திக்கும் உகந்த வகையில் செயற்பட முன்வரவேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.

வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற புத்தாக்குநர் கண்காட்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: கண்டுபிடிப்பாளர்களைக் கண்டுபிடிக்கக் கூடியதாகப் பாடசாலைப் பரப்புக்குள்ளும் வெளியிலும் புத்தாக்கங்களுக்கான செயற்பாடுகள் விரிவடையவேண்டும்.

புத்தகப் பூச்சிகளாக வகுப்பறைக்குள்ளான கல்வியுடன் மட்டும் நின்றுவிடாமல் மக்களின் வாழ்வுக்கு, சமூகத்தின் அபிவிருத்திக்கு இளையதலைமுறையினர் தமது வளங்களைப் பயன்படுத்தவேண்டும்.

ஆனால் வகுப்பறைக் கல்வியும் பரீட்சையும்தான் எமது திட்டமாக இருக்கிறது.

பாடசாலை மாணவர்களின் திறமைகளை வளர்த்து அவர்களின் கண்டுபிடிப்புகளை வலுவுள்ளதாக்கும் வகையில் இந்த ஆணையம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த இளம் விஞ்ஞானிகளின் ஆக்கங்களை முழுமையாகப் பார்க்கமுடியாவிட்டாலும் இங்கு உள்ளவர்கள் அதுபற்றிக் கூறக்கேட்டேன்.

இங்கு புதிய பண்பாட்டை கண்டுகொள்வோம். சோதனைகளை அதற்கான புள்ளிகளை அதிகரிக்கத் தனியார் பாடசாலைகளுக்கு ஓடிச்செல்லும் சூழலிலும் உங்களது புதிய கண்டுபிடிப்புகள் ஒரு பெரிய விடயம்.

இந்த ஆர்வம் மேலும் பல புதிய ஆக்கங்கள் உருவாக உதவும். கல்வி, தொழில்நுட்ப முறையுடன் கூடியதாக உங்களிடம் அமைந்துள்ளது. இந்தவகையில் உங்களின் சாதனைக்கான இந்த விருதுகள் கிடைக்கின்றன.

இந்த யுகம் அறிவின் யுகம். அதனால் எந்த உலகத்தையும் வெல்லலாம். எனவே இது வெறும் புத்தக உலகாக இன்றிச் செயற்படும் அறிவுலகாக இருத்தல்வேண்டும் - என்றார். (203-111)

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு 60 மில்லியன் ஒதுக்கீடு

மந்திகை,செப்.19

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கு 'நிக்கொட்' நிறுவனம் 60 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்த நிதியைக் கொண்டு மருந்தகம், வைத்தியர் விடுதிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இந்த மருந்தகம், வைத்தியர் விடுதிகள் ஆகியவற்றின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் சுமார் 75ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபை சுமார் 30 லட்சம் ரூபா செலவில் நோயாளர் விடுதிகளைப் புனரமைத்து அழகுபடுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (203-218)

## வேலாயுதம் ம.வியில் புதிய மாடிக் கட்டடம்

வடமராட்சி,செப்.19

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கும் நூலகத்திற்குமென புதிதாக மாடிக் கட்டடம் ஒன்று 99 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

'நெக்டப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்படும் இம் மாடிக் கட்டடத்தின் கீழ்ப்பகுதியில் விஞ்ஞான ஆய்வுகூடமும் மேல் மாடியில் நூலகமும் அமையுமென அதிபர் ஆ.ஜெகநாதன் தெரிவித்தார். (203-236)

நாளை மட்டும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில்
கண்காட்சியும்
சிறப்பு விற்பனையும்
Prince
"Better than the Best"
கண்காட்சியும் சிறப்பு விற்பனையும்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின்
Grace Hensman Memorial மண்டபத்தில்
செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி
காலை 9 மணிமுதல் 5 மணிவரை
Jewelers Designing
Cake Icing
Flower Arrangement
Saree Work
Clay Work
Painting
Box Making
Needle Work
Wedding Bouquet
Candle Making
அனுமதி இலவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு

Sri Lanka Insurance

இலங்கையில் அதி உன்னத சேவையினை வழங்கிவரும் காப்புறுதியின் முன்னோடியான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் யாழ்ப்பாணம், நெல்லியடி, கொழும்புக் கிளைகளுக்கான கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

## MARKETING EXECUTIVES

### QUALIFICATIONS

- ★ G.C.E. O/L
- ★ G.C.E. A/L
- ★ Work Experience (கட்டாயம் அல்ல விரும்பத்தக்கது)

### Benefits

- ★ Permanant Salary
- ★ Bonus
- ★ EPF+ETF
- ★ Company Motor Bike
- ★ Company Mobile phone
- ★ Free Medical Benefits
- ★ Car Loan
- ★ Educational Loan

## INSURANCE ADVISORS

### QUALIFICATIONS

- ★ G.C.E. O/L

### Benefits

- ★ Salary + Allowance
- ★ Bonus
- ★ Motor Cycle Loan
- ★ Mobile phone

## PART TIME OFFICERS

### Benefits

- ★ Allowance
- ★ Bonus
- ★ Vehicle Loan

விண்ணப்பதாரிகள் தமது சுயவிவரக்கோவையினை (BIO-DATA) எதிர்வரும் 30.09.2008 இற்கு முன்னதாக "விற்பனை முகாமையாளர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் பதவியின் இலக்கத்தையும் பணியாற்ற விரும்பும் கிளையின் பெயரையும் குறிப்பிடவும்.

*மேலதிக விவரங்களுக்கு:*

விற்பனை முகாமையாளர்,
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.
021 222 2023
011 2357566
0777563781/ 0773863753

விற்பனை முகாமையாளர்,
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
மக்கள் வங்கி முன்பாக,
பிரதான வீதி, நெல்லியடி.
021 226 4686
0777297547

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பிராந்திய மக்களுக்குத் தேவையான காப்புறுதிச் சேவையினை சிறந்த தரத்துடன் அதிகளவில் வழங்கியதன் மூலம் முதல் இடத்தைப் பெற்றுக் கொண்ட

**திரு.ஜெனியூட்**

அவர்களையும் அவருடைய குழுவினரையும் இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள் சார்பில் வாழ்துகின்றோம்.

(சி/554720)

**அமைப்பாளர்,**
இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், வாடகைக்கு வீடு

விவசாய பீடத்தினர் பயன்படுத்துவதற்கு வசதியாக சகல வசதிகளுடனும் கூடிய ஆகக்குறைந்தது 2500 சதுர அடி பரப்பளவுள்ள வீடு விவசாய பீடத்தை அண்மித்த பகுதியில் வாடகைக்குத் தேவை.

வீட்டை வாடகைக்குத் தர விரும்புவோர் உதவிப் பதிவாளர்/நிர்வாகம், அவர்களுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம், பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்படிவங்களை 26.09.2008 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் உதவிப் பதிவாளர்/நிர்வாகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் "விவசாய பீடத்திற்கான வீடு" எனக் குறிப்பிடப்பட வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது

*பதில் பதிவாளர்.*

## உளமார வாழ்த்துகின்றோம்

**திரு.இ.வரதீஸ்வரன்**
(B.B.A (Hons), M.A (Merit), SLAS.Class- I )



வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளரும், சமுர்த்தி பிரதிப் பணிப்பாளராகவும் கடமையாற்றும் திருவாளர் இராசரட்ணம் வரதீஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுகலைமாணி பட்டப்படிப்பில் சிறப்புத் தரத்தில் (Merit) சித்தி எய்தியமையை மனதாரப் பாராட்டுவதுடன், மேன்மேலும் உயர்வுகள் பெற உளமார வாழ்த்துகின்றோம்.

சமுர்த்தி முகாமையாளர்கள்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
*பிரதேச செயலகம், பருத்தித்துறை.*

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி மேகலா குணசிங்கம் அவர்களின் தந்தை

**குமாரசாமி துரைராசா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி/554716)

## இலங்கை மின்சார சபை- யாழ்.பிரதேச அலுவலகம்
## மின் தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசரத்திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு 20.09.2008 சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

சுன்னாகம் பகுதி, குப்பிளான், மயிலங்காடு, ஏழாலைப் பகுதி, கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம்.

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.
2008.09.18.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்"
**இலங்கை மின்சார சபை**

(சி/554715)

## மரண அறிவித்தல்

*திருமதி மகாலஷ்மி வேலுப்பிள்ளை*

71/13, சேர் பொன். இராமநாதன் றோட், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது U.K. இல் வசித்து வந்தவருமான திருமதி மகாலஷ்மி வேலுப்பிள்ளை 14.09.2008 ஞாயிற்றுக்கிழமை U.K. இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் வேலுப்பிள்ளை (முன்னாள் P.W.D. ஓவசியர்).அவர்களின் அன்பு மனைவியும் Dr.ஜெகதீஸ்வரி - Dr. சோமசுந்தரராஜா, குகனேந்திரன் - Dr. சகுந்தலாதேவி, Dr. நிமலேஸ்வரி - Dr. வாமதேவன், Dr. பாலேந்திரன் -Dr. சறோஜா, மகேஸ்வரி - காலஞ் சென்ற ஸ்ரீ பத்மநாதன், Dr. விமலேந்திரன் - Dr.சுரேகா, காலஞ்சென்ற சிவனேந்திரன் ஆகியோரின் தாயும்- மாமியாருமாவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நாளை (20.09.2008) சனிக்கிழமை U.K இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58, Farquhar Road,
Edgbaston,
Birmingham,
B15 3RE U.K.

(சி/554713)

தகவல்
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணியை வரவேற்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை ஊர்காவற்றுறையில் இடம்பெற்றது. வீரர்கள் 'பான்ட்' வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுவதை முதற் படத்திலும், கல்லூரி அதிபர் விளையாட்டுப் பொறுப்பாசிரியர், அணித்தலைவர், பயிற்றுவிப்பாளர் ஆகியோர் மாலையிட்டு வரவேற்கப்படுவதை இரண்டாவது படத்திலும், வீரர்கள் காட்சி போட்டியில் ஈடுபடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம். (50-325)

# செஞ்சிலுவைச் சங்கத்தின் தேசியப் போட்டிகளில் யாழ்ப்பாண வீரர்கள் ஐவர் வெற்றி பெற்றனர்

வலி.வடக்கு,செப்.19

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்திய மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து வீரர்கள் வெற்றியீட்டியுள்ளதுடன் இருவர் தேசிய ரீதியிலான சாதனையையும் நிலைநாட்டியுள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற இப் போட்டியில் யாழ்.மாவட்ட அணி வீரர்கள் முழுமையாகக் கலந்துகொள்ளாதபோதிலும் மட்டுப்படுத்திய வீரர்களே கலந்து கொண்டார்கள்.

23 வயதுப் பிரிவினருக்கான நீளம் பாய்தல் போட்டியில் மாதகலைச் சேர்ந்த ஏ. ரஜீவ்ராஜ் 7.40 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மெய்வல்லுநர் போட்டியில் நீளம் பாய்தலில் தேசிய ரீதியாகச் சாதனையையும் ஏற்படுத்தியுள்ளார்.

பெண்களுக்கான 20 வயது உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த வி.கஜிதா 1.56 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மெய்வல்லுநர் போட்டியில் உயரம் பாய்தலில் தேசிய ரீதியாக சாதனையையும் ஏற்படுத்தியுள்ளார்.

ஆண்களுக்கான 16 வயது குண்டு போடுதலில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர் எஸ்.கவிதரன் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

பெண்களுக்கான 20 வயதுப் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வீராங்கனை எஸ்.கீர்த்திகா தட்டெறிதலில் 2ஆம் இடத்தையும், குண்டுபோடுதலில் 3ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆண்களுக்கான 18 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி.பாலசங்கர் உயரம் பாய்தலில் 3ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளார். (50-86)

# இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,செப்.19

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்குச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள 13, 16,18 வயதுப் பிரிவினர்களுக்கான ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

**13 வயதுப் பிரிவு**

* உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்.
* ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

**16 வயதுப் பிரிவு**

* உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியால்யம்.

**18 வயதுப் பிரிவு**

* குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி. (50-86)

# சங்கானைக் கோட்டப் பாடசாலைகளிடையே இடம்பெறும் உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,செப்.19

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 14, 16, 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள் வருமாறு:

**14 வயதுப் பிரிவு**

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கும் தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் விக்கினேஸ்வரா வித்தியாலயம் 3:0 என்ற கோல்கணக்கில் சைவப்பிரகாச வித்தியாலயத்தை வென்றது.

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டி ஆட்ட நிறைவில் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதையைத் தொடர்ந்து விக்ரோறியாக் கல்லூரி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

சித்தங்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயத்திற்கும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் வட்டு.மத்திய கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தை வென்றது.

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கும் அராலி வள்ளியம்மை ஞாபகார்த்தப் பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை 2:0 என்ற கோல் கணக்கில் சைவப் பிரகாச வித்தியாலயத்தை வென்றது.

அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலைக்கும் தொல்புரம் விக்கினேஸ்வரா கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை 2:0 என்ற கோல் கணக்கில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தை வென்றது.

**16 வயதுப் பிரிவு**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கு வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதையைத் தொடர்ந்து விக்ரோறியாக் கல்லூரி 6:5 என்ற கோல் கணக்கில் அராலி கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையை வென்றது.

**18 வயதுப் பிரிவு**

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற போட்டியில் விக்ரோறியாக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வட்டு மத்திய கல்லூரியை வென்றது. (50-86)

# மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் இளவாலை கன்னியர்மடத்துக்கு பதக்கம்




யாழ்ப்பாணம்,செப்.19

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையே அண்மையில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலயம் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களை வென்றது.

15 வயதுப் பிரிவுக்கான 4X100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் 17 வயதுப் பிரிவுக்கான 4X400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் இளவாலைக் கன்னியர் மட மாணவிகள் பெற்றுக்கொண்டனர்.

அத்துடன் தனிநபர் தடகளப் போட்டிகளில் செல்வி சு.பகீரதி 100 மீற்றர் ஓட்டத்தில் 2ஆம் இடத்தையும், 200 மீற்றர் ஓட்டத்தில் 3ஆம் இடத்தையும், செல்வி செ.நிலக்சனா (11 வயது) நீளம் பாய்தலில் 2ஆம் இடத்தையும், செல்வி யே.சாளினி (13 வயது) 200 மீற்றர் ஓட்டத்தில் 2ஆம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். வெற்றியீட்டிய வீரர்கள் படத்தில் அதிபர், ஆசிரியர்களுடன் காணப்படுகின்றனர். (50)



யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றது. இச்சுற்றுப்போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் தெரிவான இராகுலன், சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவான கவாஸ்கரன், சிறந்த களத்தடுப்பாளராகத் தெரிவான நோபேட், இறுதிப் போட்டியின் சிறந்த பந்துவீச்சாளராகத் தெரிவான திலக்ஷன் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஹற்றன் நஷனல் வங்கியின் முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கத்திடமிருந்து பரிசில்களைப் பெறுவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தடம் அமைக்கும் சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை



அதிபர்
ஆறுமுகம் பேரின்பநாயகம்

சங்கானை ஸ்தான அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை இடம்பெயர்ந்த மாணவர்களின், குறிப்பாக வலி. வடக்கு, காரைநகர்ப் பகுதிகளில் இருந்து நலன்புரி நிலையங்களில் வாழும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் பாடசாலையாக மிளிர்கின்றது.

இப்பாடசாலை பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் பாடசாலையின் அதிபர் ஆறுமுகம் பேரின்பநாயகம் விரிவாகக் கூறினார். தரம் 01முதல் 05 வரையான வகுப்புகளைக் கொண்டுள்ள இப்பாடசாலை தற்போது 130 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. ஆசிரியர்கள் அதிபருடன் 06 பேரும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒருவரும் கடமையாற்றி வருகின்றார்கள்.

1872ஆம் ஆண்டு 03ஆம் மாதம் 27 ஆம் திகதி கிறிஸ்தவ மிஷனரியினால் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது சங்கானைக் கல்விக் கோட்டத்தில் காணப்படும் ஒரே ஒரு 'ஸ்தான' என்று அழைக்கப்படும் பாடசாலையாகவும் சங்கானை ஸ்தான அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை விளங்குகின்றது.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்கள் பிரத்தியேக ஆசிரியர் குழுவொன்றினால் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றார்கள். கடந்தாண்டு இடம் பெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 20 பேர் தோற்றி ஒருவர் 160 புள்ளிகளைப் பெற்று சித்தி அடைந்துள்ளதுடன், 06 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

இந்த வருடம் இடம்பெற்ற புலமைப் பரிசில் பரீட்சைக்கு 30 மாணவர்கள் தோற்றியுள்ளார்கள். அவர்களில் பலர் சிறப்பான பெறுபேறுகளை எய்துவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடசாலை ஆசிரியர்கள் தமது பாடவிதானத்திற்கு உட்பட்டு சிங்கள மொழியை திணைக்களம் நடத்தும் செயலமர்வுகளில் கற்று வந்து, மாணவர்களுக்கு புகட்டுகிறார்கள். இதன் மூலம் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான சொற்களையும் கற்பித்து வருகிறார்கள்.

தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி

## பெற்றோரினதும், கல்வித் திணைக்களத்தினதும் உதவிகள் குறைகளை நிவர்த்தி செய்யத் துணைபுரிகின்றன

குடும்பமட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம் என்பனவற்றினதும் தமது திறமையை வெளிப்படுத்தி வருகின்றனர்.

விளையாட்டுத் துறையிலும் மிகுந்த ஈடுபாட்டோடு மாணவர்கள் கலந்து கொண்டு வருகின்றார்கள். தொடர்ந்தும் விளையாட்டுத் துறையை வளர்த்தெடுக்கும் நடவடிக்கைகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக பாடசாலைகளில் போதிய இடவசதிகள் இன்மையால் பாடசாலைக்கெனத் தனியாக விளையாட்டு மைதானம் இருக்கவில்லை. எனினும் 2006ஆம் ஆண்டளவில் வெளிநாடுகளில் வசிக்கும் பழைய மாணவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாக பாடசாலைக்கு அருகில் 10 பரப்புக் காணி கொள்வனவு செய்து மைதானத்துக்கென வழங்கப்பட்டுள்ளது.

புதிய காணி கொள்வனவு விளையாட்டு மைதானத்திற்கு வழி ஏற்படுத்தியுள்ளதுடன் மட்டுமல்லாது புதிய கட்டடத் தொகுதியை அமைக்கும் சாத்தியத்தையும் உண்டு பண்ணி யுள்ளது. எதிர்காலத்தில் கல்வி வலயத்தின் உதவியுடன் புதிய கட்டடம் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படவுள்ளன.

உலக உணவுத்திட்டம் இப்பாடசாலைக்கு அவசியமானதாகவுள்ளது. பெற்றோர்களின் முழுமையான ஒத்துழைப்புடன் உணவுத்திட்டத்தின் நோக்கத்தை உரிய முறையில் நிறைவேற்றும் ஒரு பாடசாலையாகவும் சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலை விளங்குகின்றது.

இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள 05 நலன்புரி நிலையங்கள் பாடசாலைச் சுற்றாடலில் காணப்படுகின்றன. இங்குள்ள பிள்ளைகள் ஆரம்பக் கல்விக்கு இந்தப் பாடசாலைக்கு வருகின்றார்கள். சுற்றாடலில் உள்ள பிள்ளைகளில் ஒரு பகுதியினர் வெளியிடப் பாடசாலைகளுக்குச் செல்லும் நிலைமையும் காணப்படுகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பெற்றோரும் பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்வதில் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

நூற்றாண்டைக் கடந்துள்ள இப்பாடசாலையில் இதுவரை பழைய மாணவர் சங்கம் அமைக்கப்படவில்லை. அதிபர் பழைய மாணவர் சங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியை முன் னெடுத்துள்ள போதிலும் அது முழு மையாகக் கைகூடாத நிலையே காணப்படுகின்றது.

கடந்தாண்டு வலிகாமம் கல்வி வலயமும் சங்கானைக் கல்விக் கோட்டமும் இணைந்து கணனிகள், கணனி அறை, மேலைத்தேய வாத்தியக்கருவிகள், கற்றல் உபகரணங்கள், அனைத்து மாணவர்களுக்கும் சப்பாத்துகள், 80 மாணவர்களுக்கு புத்தகப் பைகள் என்பனவற்றை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினூடாகப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்.

பாடசாலைக்கு அயலில் உள்ளவர்களும் பாடசாலைக்கு தமது உதவிகளையும் ஆதரவையும் தேவைக்கு ஏற்ப வழங்கி வருகின்றார்கள்.

பாடசாலையில் நவீன கற்றல் கற்பித்தல் முறைக்கு ஏற்ப வகுப்பறைகள் காணப்படாத நிலை தென்படுகின்றது. ஒரு மண்டபத்தில் பகுதி பகுதியாகப் பிரித்து தற்காலிக தட்டிகள் பிரிவு இடப்பட்டு வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து பாடசாலைக்கு வருகின்ற போதிலும், உரிய நேரத்திற்கு வருகை தந்து, கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர்.

பாடசாலைக் கிணற்றிலுள்ள குடிநீர் சற்று உவர் நீராகக் காணப்பட்டாலும் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. மின்சார வசதியுடன் கூடிய குழாய்க் கிணறு மூலம் குடிநீர் பெறப்பட்டு குழாய்கள் மூலம் மாணவர்களுக்கு நீர் விநியோகிக்கப்படுகின்றது.

இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் இடை நிலைக் கல்வியை ஆகக் குறைந்தது மூன்று கிலோமீற்றர் தூரமேனும் சென்றுதான் கற்க வேண்டும். போக்குவரத்து கஷ்டம் காரணமாக பாடசாலைக்குப் பிள்ளைகள் சீராக செல்ல முடியாது நிற்பதும், பின்னர் பரீட்சைகளில் சித்தி அடையத்தவறுவதும் அதனைத் தொடர்ந்து பாடசாலைக் கல்விக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நிலைமையும் பாடசாலைச் சுற்றாடலில் தொடர்கின்றது.

பிள்ளைகளின் கல்வி விடயத்தில் இங்குள்ள அதிபரும் ஆசிரியர்களும் ஏற்றத்தாழ்வுகளை மறந்து மாணவர் நலனை மாத்திரமே மனதிற் கொண்டு சேவையாற்றி வருகின்றனர்.

**பவித்திரன்**

---

# பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை விருத்தியாக்கத் தரவட்டச் செயலாற்றுகை உதவி புரிகின்றது

'சமகாலக் கல்விச் செயற்பாடுகளில் புதிய போக்காகவும் முதன்மைக் காரணியாகவும் விளங்கும் நடைமுறைப்படுத்துகை' என்ற தலைப்பில் 16.09.2008 உதயனில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி.

**தரவட்டங்கள்**

ஆசிரியர்கள் பாடங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும்போதும் தமது வாண்மைத்துவ விருத்திக்கான சவால்களின் போதும் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பாக தாமே ஒன்றிணைந்து வாரத்தில் அல்லது மாதத்தில் ஒரு தடவை சந்தித்து அவை தொடர்பாக ஆராய்ந்து எடுக்க வேண்டிய தீர்




மானங்களைக் கலந்துரையாடித் தேடி அறிந்து தமது பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைப் பண்புத்தர விருத்தியாக்கி தமது வாண்மையும் தொழில் வாழ்க்கையையும் திருப்தியாக்கும் உத்தியாகத் தரவட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஜப்பானில் அனைத்து நிறுவனங்களிலுமே தரவட்டங்கள் இயங்குகின்றன.

இத்தரவட்டக் கலந்துரையாடல்கள் பின்வரும் பல்வேறு செயற்பாடுகள் பகுப்பாய்வுகள் மூலம் மேற்கொள்ளப்படும்.

★ 'SOWT' பகுப்பாய்வு

★ கைசின் செயற்பாடு (படிப்படியான முன்னேற்றம்)

★ சிந்தனை கிளறலும் மீள்நோக்கும் - பிரதிபலிப்பும்

★ செயல்நிலை ஆய்வு (Action Research)

★ கண்டறிமுறை, முன்னுரிமை தீர்மானித்தல், பிரச்சினை தீர்த்தல்

★ சரியீட்டுப் பட்டியல்கள், காரண விளைவு வரிப்பட ஆய்வு.

★ சிதறல் வரைபட பகுப்பாய்வு, கலந்தாய்வுகள்.

இவ்வாறு குறிப்பிட்ட பாட ஆசிரியர்கள், குறித்த அல்லது அயல் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் ஒன்றிணைந்து இத்தரவட்டச் செயலாற்றுகை மூலம் தமது அறிவை இற்றைப்படுத்திக் கொள்ளலாம். பல பிரச்சினைகளுக்கு விரைவாகத் தீர்வுகளைக் காணலாம். தாம் கண்ட தீர்வுகளைத் தம் பாடசாலை அதிபர், ஆசிரிய ஆலோசகர்கள், கல்விப் பணிப்பாளர்களுக்கு எடுத்துரைக்கலாம். நவீன மனித வள அபிவிருத்தி முகாமைத்துவத்தில் இத்தரவட்ட செயலாற்றுகை முதன்மை பெறுகின்றது. இதன் மூலமாக ஆசிரியர்களுடைய மனப்பான்மைகளும், பண்புத்தரங்களும் உயர்வடையும். இது மாணவர்களுடைய நேர்மையான பண்புத்தர விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும். சிறந்த மனப்பான்மைகளுடன் கூடிய எதிர்காலப் பிரஜைகளாக அவர்களை உருவாக்க வழிவகுக்கும். மேற்கூறப்பட்ட தரவட்டத்தின் அடிப்படைகள் பின்வருமாறு:-

1. மனித வள உருவாக்கமும் நேர்மனப்பான்மையை ஏற்படுத்தலும் (என்னால் முடியும் என்ற நேர்மனப்பான்மை - பதற்றமான நிலைகளைத் தவிர்த்தல் - படிப்படியான வெற்றிகள்).

2. குறைகூறாத பண்பு - பிரச்சினைகள் ஏற்படும்போது அது தொடர்பாக ஆசிரியர்கள் ஒன்றுகூடி மனந்திறந்து தீர்மானம் எடுத்தலினூடாக எவரும் எவர் மீதும் குறைகூறாத தம்மைத் தாமே திருத்திக்கொள்ளும் வாய்ப்பைப் பெறல்.

## ஜப்பானில் அனைத்து நிறுவனங்களிலும் தரவட்டங்கள் நிறுவப்பட்டுள்ளன



பா.தனபாலன்,
உபபீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

3. குழு ரீதியான மனநிலை - குறித்த எல்லோருமே பங்குபற்றுவதற்கும், தமது கருத்தை எடுத்துரைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குதல் மூலம் தீர்மானம் எடுப்பதில் சகலரதும் பங்களிப்பு இருக்கும் என்பதால் பாடசாலை வெற்றிக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய குழு ரீதியான மனநிலையுடன் தீர்மானங்களை எடுத்தல்.

4. பற்றுணர்வு - இந்தப் பாடசாலை, இந்த வகுப்பறை என்னுடையது, இதன் முன்னேற்றம் என் முன்னேற்றம் என்ற உணர்வை வளர்ப்பதால் தரவட்டம் சுய நலத்தை நீக்கி, சுயவிமர்சனம் - சுய மதிப்பீட்டின் மூலம் எனது உழைப்பை பாடசாலைக்கு வழங்குதல் தொடர்பான பங்கேற்றலை அதிகரிக்கும்.

இங்கு முக்கியமாகத் தரவட்டத்தில் பங்குபற்ற யாரும் கட்டாயப்படுத்துவதில்லை. தாமாகவே ஆசிரியர்கள் முன் வந்து பாடரீதியாகவோ அல்லது துறை ரீதியாகவோ வேறு ஏதோ ஒரு வகையில் இணைந்து கலந்து கொள்வார்கள். தரவட்டம் நன்கு இயங்க எந்த எதிர்ப்பும் இல்லாமல் மனமுவந்து முன்வருவார்கள். கட்டுப்படல், கட்டாயப்படல் என்பது இங்கு இல்லை. இதயசுத்தியுடன் செயற்படும் மிக உயர்ந்த வாண்மைத்துவ செயலாற்றுகையாக இது உள்ளது. இந்த நடைமுறைகளை கல்வி அமைச்சு எமது ஆசிரியர்களிடையே ஏற்படுத்த படிப்படியான செயலாற்றுகைகளை மேற்கொண்டு வருகின்றது. இந் நீரோட்டத்தில் எமது கல்விச் சமூகத்தவர்கள் கலந்து தம்மையும் அதனூடு எம் மாணவ சமூகத்தையும் கல்விப் பண்புத்தர விருத்தியில் உயர்த்த, ஈடுபாட்டுடன் செயற்படவேண்டியுள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட இலங்கை சர்வோதய அறங்காவலர், சமூகசேவகி
# செல்வி பொன். ஐமுனாதேவி (J.P) அவர்களின்
# பொன்விழாச் சிறப்பு மலர் - 19.09.2008

## பணி சிறக்க வாழ்த்து



செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவி வட இலங்கைச் சர்வோதய அமைப்பின் அறங்காவலராகப் பணிபுரிவது அனைவருக்கும் பெருமையைத் தருகின்றது. இனிமையாகப் பழகும் சுபாவமும் எடுத்த விடயத்தை செவ்வனே ஆற்றும் திறமையையும் இறை பக்தியையும் கொண்ட ஜமுனா தேவியின் சமூகப்பணி புங்குடுதீவு மக்களுக்கு மட்டுமின்றி ஏனைய தீவக மக்களுக்கும் பெருமையைத் தருகின்றது. சமூகப் பணிகள் முழுதாகச் செய்துவரும் சர்வோதய அமைப்பில் தன்னை ஈடுபடுத்திப் பணியாற்றும் செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவியின் பணிகள் தொடர்ந்து நடைபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரது அறப்பணியைப் பாராட்டி விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சி அடைக்கின்றோம். என்றும் வேண்டும் இன்ப அன்பு.

இரண்டாவது குரு மஹா சந்நிதானம்
ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்.

## சமூக, சமுதாயப் பணிகள் சிறக்கட்டும்



ஏழு பிள்ளைகள் கொண்ட குடும்பத்தில் பிறந்த பொன்னம்பலம் ஜமுனாதேவி, 1976 இல் சர்வோதயத்தில் இணைந்து இற்றை வரை ஆற்றிவரும் பணி உண்மைக்காக வாழ்தல், மக்களுக்கு சேவையாற்றுவதில் மனநிறைவு, தர்ம சிந்தனைகளைக் கடைப்பிடித்தல் என்கின்ற இவரது உயரிய சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுப்பனவாக அமைந்துள்ளன.

ஆரம்பத்தில் சர்வோதயத்தின் மாதர் சங்க உறுப்பினர் மகாத்மா காந்தி முன்பள்ளி ஆசிரியை ஆகிய பதவிகளை வகித்த இவர் இன்று சர்வோதய இயக்குநர் சபைப் பொருளாளராகவும் கால்நடை வளர்ப்போர் சங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் என்பவற்றோடு இணைந்து பணியாற்றுகின்றார். அத்துடன் இவர் மாவட்ட சமாதான நீதிவானும் வேலணைப் பிரதேச மத்தியஸ்த சபை உறுப்பினரும் கூட. புங்குடுதீவு வாழ் மக்களின் சமூக, பொருளாதாரப் பண்பாட்டு விருத்தியை நோக்கமாகக் கொண்டிருந்த இவரது பணிப்பரப்பு இன்று யாழ்.மாவட்ட ரீதியாகப் பரந்து விரிந்துள்ளது.

இவரது பணி சிறக்கவும் நிலைக்கவும் இறையருளை வேண்டுகின்றேன்.

கே.கணேஷ், அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலர், யாழ்.மாவட்டம்.

## பிரதேச வளர்ச்சிக்காக உழைப்பவர்



புங்குடுதீவு மண்ணில் சேவையாற்றி வரும் நிறுவனமான வட இலங்கை சர்வோதய நிறுவனத்தின் அறங்காவலராகப் பணி புரியும் செல்வி பொன்னம்பலம் ஐமுனா தேவி அவர்கள் பொன்விழாக் காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவர் தன்னலங்கருதாது எமது பிரதேச வளர்ச்சிக்காக முன்னின்று உழைத்துக் கொண்டிருப்பவர். இப்பிரதேச மக்களுக் கான சமூக, கலை, கலாசார, அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருவதுடன் இளம் சிறார்களின் உடல், உள மேம்பாட்டுக்காகவும் இவர் உழைத்து வருகின்றார்.

பொன்விழாக்காணும் செல்வி பொன்னம்பலம் ஐமுனா தேவி அவர்களது பணிசிறக்க மனமார வாழ்த் துகிறேன்.

மு.நந்தகோபாலன், பிரதேச செயலர்,
தீவகம் தெற்கு, வேலணை.

## சர்வோதய அமைப்பின் ஒப்பற்ற தலைவி



வட இலங்கை சர்வோதய அமைப்பின் அறங்காவலர் செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவி அவர்கள் புங்குடுதீவு மக்களுக்கு ஆற்றிவரும் பெரும்பணி பாராட்டிற்குரியது. புங்குடுதீவு மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்தல், பாடசாலைகளுக்கு வசதியை ஏற்படுத்தல், மாணவர் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தும் செயற்பாடுகள், யுவதிகளுக்கான சுயதொழில் பயிற்சிகளை வழங்குதல், முன்பள்ளி அபிவிருத்தி போன்ற பல்வேறு பணிகளில் இவர் முன்னின்று செயற்பட்டு வருகிறார்.

புங்குடுதீவுப் பிரதேசத்தின் வள மேம்பாட்டிலும் மக்களின் நல மேம்பாட்டிலும் அக்கறை காட்டிச் செயற்படும் அவரை வட இலங்கை சர்வோதய அமைப்பின் ஒப்பற்ற தலைவி எனக் குறிப்பிடலாம். இவர் மேலும் தனது சேவையில் நிலைத்து நின்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

வ.இராதாகிருஷ்ணன்,
வலயக்கல்விப் பணிப்பாளர், தீவகம், வேலணை.

## ஜமுனாதேவி எமது சூழலுக்கு உதாரணமானவர்



இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப் பிரிவுக்கு தலைவர் என்ற வகையில் புங்குடுதீவு இளைஞர், யுவதிகளுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலமும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினாலும் நடத்தப்பட்ட பல பயிற்சிகளின்போது வட இலங்கை சர்வோதய அமைப்பின் சேவையினையும் அறியமுடிந்தது. அங்குள்ள மக்களை நல்வழிப்படுத்துவதற்காக அந்த அமைப்பு மேற்கொள்ளும் சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகளைக் காண சந்தர்ப்பம் வாய்ந்தது. புங்குடுதீவில் சமூகப் பணிகள் சிறப்புற அமையக் காரணமானவர் செல்வி.பொ.ஜமுனாதேவி அவர்களாகும். அவர் தமது பொதுப்பணி ஊடாகத் தனது மக்களுக்கு பல நன்மைகளை செய்து வருகிறார். அவர் நீடுழி வாழ்ந்து மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டுமென இப் பொன் நாளில் வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்,
தலைவர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணம்.

## நற்பணி தொடர ஆண்டவன் அருளட்டும்



வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி ஜமுனாதேவி பொன்னம்பலம் அவர்களின் 50 ஆவது அகவையினைக் கொண்டாடும் விழாச் சிறப்புற வாழ்த்துகின்றேன். புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்த செல்வி ஜமுனாதேவியினை சிறுவயது முதற்கொண்டே நானறிவேன்.

ஜமுனாதேவி 1970 களிலிருந்து சமூக, சமய பணிகளில் இணைந்து வட இலங்கைச் சர்வோதயத்துடன் சங்கமமானார். அப்போதுமுதல் சமூகப் பணியுடன் ஆன்மீகப் பணியையும் சேர்த்து ஆற்றி வருகின்றார். அன்னை சாரதாதேவியினை பார்ப்பது போன்ற பிரமை ஏற்படும் அளவிற்கு இவரது பணித்தன்மை மிளிர்வதை அவதானிக்க முடிகின்றது. இவர் சுக நலத்தோடும் ஆயுளோடும் வாழ சோமசுந்தரப் பெருமானின் அருளாசி கிடைக்க ஆசீர்வதிக்கின்றேன்.

சிவ ஸ்ரீனிவாச நாகேந்திரக் குருக்கள்,
சிவன் தேவஸ்தானம், புங்குடுதீவு.



## நலிந்த மக்களின் தொண்டர்



வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொ.ஜமுனாதேவி அவர்கள் சமூகத்திற்கு ஆற்றி வரும் பணிகள் தொடர எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். புங்குடு தீவுக் கிராமத்திற்கும் நலிந்த மக்களுக்கும் இவர் ஆற்றிவரும் தொண்டு அளப்பரியது. சர்வோதய நிர்வாகத்தை செவ்வனே நடத்திச் செல்வது பாராட்டுக்குரிய ஒன்றாகும். அவர் மக்கள் பணி, ஆன்மீகப் பணியென தமது சேவையினை விரிவுபடுத்தி வருகின்றார். அவரது இப்பணி தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் கா.குகபாலன்.

## பல்துறைசார் பணியாளர்



வட இலங்கை சர்வோதய அறங்காவலரும், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய நிர்வாக உறுப்பினராகவும், பொருளாளராகவும் பணியாற்றி வருகின்ற செல்வி பொ. ஜமுனாதேவி அவர்கள் மக்கள் துயர்துடைக்கும் பணியில் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றி வருகிறார். இவர் மக்கள் பணியுடன் மட்டும் நின்று விடாது ஆன்மீகப் பணிகளையும் மேற் கொண்டும் வருகின்றார். இவரது பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

சி.வி.கந்தையா சிவஞானம், கௌரவ தலைவர்,
யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்.

## பொன்விழா சிறக்கட்டும் பணி தொடரட்டும்



இன்று தனது 50ஆவது வயதினைப் பூர்த்தி செய்யும் செல்வி பொன்.யமுனாதேவி அவர்கள் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எமது பிரதேசத்தின் அசாதாரண சூழ்நிலைகளின் மத்தியிலும் நலிந்த சமூகத்தினருக்கு சேவையாற்றி வருவது போற்றுதற்குரியது. அவரது பொன்விழா சிறப்புற அமையவும் அவரது பணி தொடரவும் புலம் பெயர் நாடுகளில் வாழும் நாம் மனதார வாழ்த்துகிறோம்.

கு.வி.பஞ்சலிங்கதுரை, லண்டன்.

## தெளிந்த அறிவோடு கருமமாற்றுபவர்



வட இலங்கை சர்வோதயத்தின் அறங்காவலராகவும் சமூக சேவகியாகவும் இருந்து அரும் பணியாற்றிவரும் செல்வி பொ.ஜமுனாதேவி அவர்களது பொன்விழாவில் அவரை வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

இவர் புங்குடுதீவு மக்களின் தேவைகளையும் பிரச்சினைகளையும் நன்கு அறிந்தவர். நவீன தொழில்நுட்ப உலகிற்கேற்ப தம் ஊர் மாணவர் களின் கல்வியை, கணனி அறிவை பு[illegible]ட்டுவது மட்டுமல்லாது கிராம அபிவிருத்தித் திட்டம், மகளிர் முன்னேற்றத் திட்டம், கால்நடை பாதுகாப்புத் திட்டம் போன்ற பல பரந்துபட்ட திட்டங்களையும் இவர் சிறப் பாகச் செயற்படுத்தி வருகின்றார்.

அவர் நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.

க.தர்மகுணசிங்கம்,
அதிபர், யா/ புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

## அர்ப்பண வாழ்விற்கு ஆசிகள்



பெண்ணியத்திற்குப் பெருமை சேர்க்கும் செல்வி பொன்னம்பலம் ஜமுனா தேவி வாழ்வில் பொன்விழாக் காண்பதைப் பாராட்டி வாழ்த்தி ஆசி கூறுகின்றேன். இவர் உண்மை, நீதி துலங்க தன் வாழ்வில் ஆன்மீக, அகிம்சை வழிகளில் குரலற்ற மக்களின் குரலாக செயற்படுபவர். இவரது பணிவான வாழ்வைப் பாராட்டும் வகையில் நற் சமூகம் பொன்விழாக் கொண்டாடி மகிழ்வது சாலப்பொருத்தம். இவ்விழா மெழுகாகத் தம்மை அர்ப் பணிக்கும் உயர் பண்பு கொண்ட பணியாளர்களின் விழாவாகக் கொள்ளத்தக்கதாகும்.

மனித மாண்பு மலர சமூகத்தின் வழிகாட்டிகளாக மிளிர வேண்டும், மிளிர முடியும். எனத் தன் வாழ்வால் வெளிப் படுத்திப் பணிசெய்து வருபவர் இவர்.

அதிகம்பேசாது சுருங்கப்பேசி ஆணித்தரமாகத் தன் கருத்துக்களை உணர்ந்தும் பண்பு இவரது தனிச்சிறப்பு.

இவரது சமூக நேசிப்பும், மனப் பலமும், ஆன்மீகப் பற்றுறுதியும் இவரது இப்பொன்விழா மக்கள் விழாவாக முன்னெடுக்கப்பட வழி சமைத்தன.

என்றும் உடலுள நலம்பெற்று வாழ்ந்து தொடர்ந்தும் நற் சமூகப் பணிகள் ஆற்றிட இறை யாசி கூறி வாழ்த்துகின்றேன்.

அருட்பணி கி.யோ.ஜெயக்குமார்,
இயக்குநர், கரித்தாஸ் கியூடெக், யாழ்பாணம்.

## ஆசிச் செய்தி



செல்வி ஜமுனாதேவி 1976 இல் சர்வோதய இயக்கத்துடன் இணைந்து மிகச்சிறந்த சமூக, சமுதாயப் பணிகளை ஆற்றி வருகின்றார். சர்வோதய நிறுவனத்தின் பொறுப்புக்களை ஏற்று சாதகமற்ற புறச்சூழ்நிலைகளிலும், கருமங்களைச் சிறப்புடன் முன்னெடுத்து வருகின்றார்.

புங்குடுதீவுக் கிராமத்து மக்களின் வாழ்வாதார செயற்றிட்டங்களை முன்னெடுத்து இவர் உதவியுள்ளார். புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தணிக்க நீர் விநியோகத் திட்டம் சிறப்பாகச் செயற்படக் காரணமாக அமைந்துள்ளார்.

அன்பும், அடக்கமும், பொதுச் சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்ட சமூக சேவகி ஜமுனாதேவி மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமூக சேவையாற்ற இறைவன் அருள்புரிவாராக.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,
வாழ்நாள் பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்.

## ஏழைப் பங்காளராகப் பணிபுரிபவர்



பொன்விழாக் காணும் புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் செல்வி ஜமுனா தேவி பொன்னம்பலம் அவர்களது பணி துர்க்காதேவியின் திருவருளால் மேலும் சிறக்கப் பிரார்த்திக்கிறேன்.

மக்கள் பணியாளர் அமரர் ஸ்ரீ மான் திருநாவுக்கரசு அவர்களின் ஆற்றுப்படுத்தலில் வளர்ந்த இப்பெண்மணியை யான் நன்கு அறிவேன்.

கொழும்புத் துறையிலுள்ள யோகசுவாமிகள் பெண்கள் இல்லத்தில் சர்வோதயம் பந்தல் அமைத்துப் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கிய காலத்தில் சகோதரி ஜமுனாதேவியின் தொண்டுப்பணி முதன்மை பெற்றது.

ஏழைகளின் பங்காளராகப் பணிபுரிபவர். பணிசெய்யும் இச்சகோதரிக்கு விழா எடுத்துக் கௌரவிக்க முன்வந்த பெருமக்கள் நன்றிக்கும், வாழ்த்துக்கும் உரியவர்கள். புங்குடுதீவுக் கிரா மத்தில் இன்றும் நிலைபெற்று வாழும் சமூகசேவகி செல்வி ஜமுனாதேவி பல்லாண்டு வாழ்ந்து சமூக, சமயப் பணி செய்ய அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்.

யாவர்க்குமாம் என்றும் இன்னுரைதானே

செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன்.

## மகத்தான சேவையாளர்



செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவி அவர்களது சேவையினால் புங்குடுதீவு மக்கள் மிகப்பெரிய பலாபலன்களைப் பெற்றுள்ளனர். இவரது சேவை மகத்தானது. பாராட்டப்படக்கூடியது. கௌரவிக்கப்பட வேண்டியது.

இளம் சமுதாயத்தினர் மக்கள் சேவை, பொதுச்சேவை போன்ற விடயங்களில் முன்னின்று செயற்பட பின்னடிக்கும் இன்றைய காலகட்டத்தில் ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என மக்கள் மனதறிந்து சேவையாற்றிப் பொன் விழாக் காணும் செல்வி ஜமுனா தேவியை வாழ்த்துகிறேன்.

கை.மகேந்திரலிங்கம்,
செயலாளர், பிரதேசசபை, தீவகம் தெற்கு,
வேலணை.

## சேவைக்கு இலக்கணமானவர்



வட இலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொன்னம்பலம் ஜமுனாதேவி அவர்கள் 50 அகவை (பொன்விழா) விழாவின்போது அவரை வாழ்த்துகின்றோம்.

இறையடி எய்திய சர்வோதயத் தொண்டர் திரு.க.திருநாவுக்கரசு அவர்களின் வேலைத்திட்டங்கள் நிறைவுபெற முன்னின்று உதவிபுரிந்தவர்.

வெளிநாடுகளில் வாழும் புங்குடுதீவு நலம் விரும்பிகளின் உதவிகளாலும் உள்ளூர் நலம் விரும்பிகளின் உதவியுடனும் செல்வி பொ.ஜமுனாதேவி கிராம மக்களுக்கு நிலையத்தின் ஊடாகப் பல வழிகளிலும் உதவி செய்து வருகின்றார். பல வழிகளிலும் கிராம மக்களின் வளர்ச்சிக்கு உதவி புரிந்து வரும் அவர்களது பணி தொடர்ந்தும் இவ்வூர் மக்களுக்கு கிட்ட இறையருள் வேண்டித் துதிக்கின்றோம்.

க.தேவதாஸ்,
புங்குடுதீவு - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகிறோம்



**திரு.சதானந்தன் கேசவானந்தன்**
(சமாதான நீதவான் All Island)

ஸ்ரீ வீரபத்திர கோயில் தர்மகர்த்தா, தலைவராய் இருந்து கும்பாபிஷேகத்தை சிறந்த முறையில் நடத்தியவரும், கற்கோவளம் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், ஸ்ரீ வல்லிபுரக் கோயில் அறங்காவல் சபைச் செயலாளரும், இலங்கை மின்சாரசபையில் 28 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் காலம் சிறப்புற அமைய வாழ்த்துகிறோம்.

கற்கோவளம்,
பருத்தித்துறை. [சி/554707]

சோ.திருமால் குடும்பம்,
ஆ.திலீபன் குடும்பம்.

## நினைவலைகள்

**நான்காம் ஆண்டு** — **மூன்றரை ஆண்டு**

தோற்றம் 01 . 11 . 1939 — மறைவு 19 . 09 . 2004



**திருமதி வே.கனகம்மா**

தோற்றம் 26 . 01 . 1926 — மறைவு 29 . 03 . 2005



**அமரர் க.வேலாயுதபிள்ளை**
(ஓய்வூதியர், இலங்கை மின்சாரசபை)

நான்கு ஆண்டுகள் சென்றாலும் நாம் மறவோம் உங்கள் நினைவை!
நாற்திசையும் நாவார நாம் புகழ்வோம் உம் பணியை!
*சாந்தி! சாந்தி! சாந்தி!*

தகவல்: வே.சிவகுமாரன்
சென்.செபஸ்ரியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [78558]

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


வசீகர தோற்றத்திற்கு

**சந்தனாலேப**

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், நன்னாரி, கஸ்தூரி, மஞ்சள், செவ்வல்லி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஒளடதங்களின் கலவை, தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும்.



யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா' சகல பார்மஸிகளிலும்

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS


## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**அந்தோனிப்பிள்ளை அல்பிரட் யோகராஜா**
(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)



தோற்றம் 08.12.1948
மறைவு 19.09.2000

கண்ணீரில் கரைந்து ஆண்டுகள் எட்டு
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மை இங்கு ஆளுகின்றன
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்க விட்டு எங்கே சென்றீர்கள்
எம் உயிர் உள்ளவரை உங்கள் நாமத்தை மறவோம்.

02, இராசாவின் தோட்ட
ஒழுங்கை,யாழ்ப்பாணம். [78509]

அவரின் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, அருமைப்
பிள்ளைகள், மருமகன்.


**STUDY IN UKRAINE (EAST EUROPE)**

**MBBS/MD** With O/L'S - 7years
With A/L' - 6years
LUGANSK STATE MEDICAL UNIVERSITY
*Recognized By Sri Lankan Mdical Council*

100% VISA SUCCESS

எமது நிறுவனத்தின் மூலம் கடந்தமாதம் அனுப்பப்பட்ட மாணவர்கள் அனைவரும் எதுவித சிரமமுமின்றி VISA வை பெற்றதுடன் தற்போது UKRAINEஇல் தமது கல்வியை தொடர்கின்றனர். (Royal College Colombo, Hindu College Colombo, St.Patricks College Jaffna, St.John's College Jaffna St.Michael's College Batticaloa, Holy Family Convent Jaffna, Hindu Ladies College, Ramanathan Hindu Ladies School Adventist International College Vavuniya, Vavuniya Maha Vidyalayam. ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர்கள்.

SPONSOR/ BANK BALANCE தேவையில்லை

UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால் UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அண்டைநாடுகளாகிய Poland, Romania, Austria , Italy, France, Spain, Germany.U.K. ஆகிய நாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான

Call: 0777 - 818/ (011) 4512591
scholinfo@yahoo.com

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50 Galle Road, Colombo.06


## தவறிவிட்டது

அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரியுடைய குணரத்தினம் நாகேஸ்வரி என்பவரின் தேசிய அ.அட்டையும், சுப்பிரமணியம் நாகேஸ்வரி என்னும் பெயர் கொண்ட விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் அரசடி வீதி, சுதுமலை கிழக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

## தேவை

நல்ல அனுபவமுள்ள உள்ளாடை (Bra) தைப்பதற்கு பெண் பிள்ளைகள் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்.
*56/14, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்,*
*T.T கொம்பியூட்டர் லேன்.*
T.P - 0774211551

## ஆசிரிய முன்சேவை பயிற்சி நெறி

யாழ்ப்பாணம்,செப்.19

தீவக வலயத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றி ஆசிரிய சேவைக்கு உள்வாங்கப்பட்ட 56 ஆசிரியர்களுக்கு 'நிகொட்' செயற்றிட்டத்தின் கீழ் ஆசிரிய முன்சேவைப் பயிற்சிநெறி வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு வேலணை ஆசிரிய நிலையத்தில் ஆரம்பமாகும் இப்பயிற்சிநெறி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும் என்று தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (203)

## கலைத்தூது கலையரங்கில் கர்ணன் திரைப்படம்

யாழ்ப்பாணம்,செப்.19

திருமறைக் கலாமன்றத்தின் திரைப்படப் பிரிவின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டு வருகின்ற திரைப்படங்களின் வரிசையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு 'கர்ணன்' திரைப்படம் கலைத்தூது கலையகத்தில் திரையிடப்படவுள்ளது.

அகலத்திரையில் இலவசமாக காண்பிக்கப்படவுள்ள இத் திரைப்படக்காட்சியை ஆர்வமுள்ள அனைவரும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203)

## பொதுக்கூட்டம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்ணாகம் கிளை 5 கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்தில் கிளை உறுப்பினர்கள் ஒன்பது பேர் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களில் இருவர் 18 - 35 வயதுக்கு இடைப்பட்டவர்களாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்று கூட்ட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சங்க கிளைக் குழுக்களின் தேர்தலை தொடர்ந்து புதிய இயக்குநர் சபை தெரிவும் நடைபெற வுள்ளது. (28)

## குடும்ப அட்டைக்கு 'பென்ரோச் பற்றறி' வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.19

யாழ்ப்பாணத்தில் சகல பொருள்களுக்கும் எதுவித தட்டுப்பாடும் இல்லை என யாழ்.வணிகர் கழகம் யாழ்.அரச அதிபர் கே.கணேசுக்கு தெரிவித்துள்ளது.

'பென்ரோச்' பற்றறிகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டைப் போக்க ஒரு குடும்ப அட்டைக்கு 2 பென்ரோச் பற்றறிகள் வீதம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ்.அரச அதிபரை வணிகர் கழகம் கோரியுள்ளது. (300-60)

## மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் தூக்கி வீசப்பட்டு காயம்

யாழ்ப்பாணம்,செப்.19

மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண்ணின் சேலைத் தலைப்பு சில்லுக்குள் சிக்கிக் கொண்டதால் தூக்கி வீசப்பட்டு காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை கைதடி நுணாவிலில் இடம்பெற்றது.

. அதே இடத்தைச் சேர்ந்த பீ.விமலாதேவி (வயது 34) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (207-60)


## வீடு வாடகைக்கு தேவை

அரசசார்பற்ற நிறுவனத்திற்கு (NGO) நல்லூர், முடமாவடி மற்றும் யாழ்.மாநகரசபையை அண்டிய பகுதிக்குள் களஞ்சிய வசதியுடன் வரக்கூடியதாக களஞ்சிய பாவனைக்கு வீடு தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

SEWALANKA
தொடர்பு: 212/1 கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P - 021 222 8549/8754 (78565)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 19 ★ 12 ★ 1940



மறைவு 02 ★ 08 ★ 2008

உயர்திரு. அமரர் *சிதம்பரப்பிள்ளை கணேசன்*
(ஓய்வுபெற்ற ஆசிரியர், சமாதான நீதிவான் - J.P
உரிமையாளர் - மோகன்ஸ் கட்டடம், பிரதான வீதி, நெல்லியடி)


எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், மரணச் சடங்கிலும் கலந்துகொண்டு பல வகைகளிலும் உதவிகள் வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கிறோம். அத்துடன் இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு:-அன்னாரின் இறுதி நிகழ்வில் பங்குகொண்ட பலரது முகவரிகள் எமக்குத் தெரியாதிருப்பதால் தயவுசெய்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*மோகன்ஸ்,*
*பிரதான வீதி,*
*நெல்லியடி.*

துயரில்:மனைவி, மகன்,மகள்மார்,
மருமகன்மார்,மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திரு.வி.மாணிக்கம்
அவர்களின் மாமி
**திருமதி நல்லம்மா கந்தமுத்து**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

(78557)
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.

## அந்தியேட்டி அழைப்பு



கடந்த 20.08.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்
அமரர் **மாணிக்கம் இராசரத்தினம்**
*(லோகேஸ்வரன்)*
அவர்களின் வீட்டுக்கிருத்தியமும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுராவத்தை,
சுன்னாகம். (78531)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தான்விட்ட தவறைத் திருத்தும் கடப்பாடு பிரிட்டனுக்கு உண்டு

புற்றுநோயால் வாழ்வா, சாவா என்று போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் நோயாளிக்கு, தலையிடியைத் தணிப்பதற்கான 'பனடோல்' மாத்திரையை புற்றுநோய் நிவாரணியாகக் கொடுப்பது குறித்து வைத்தியர் ஆலோசித்தால் எப்படி இருக்கும்?

இலங்கைப் பிரச்சினையை ஒட்டி பிரிட்டனின் மூத்த அமைச்சர் ஒருவர் கூறிய கருத்து, மேற்படி வைத்தியர் தொடர்பாக நமக்கு எழக்கூடிய எரிச்சலையே தந்து நிற்கின்றது.

இலங்கை அரசு மனித உரிமைகளை மதித்து நடப்பதை உறுதி செய்யும் நோக்குடன் - அதனை வலியுறுத்தி இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்காக - மேற்குலக நாடுகள் புதியவகை உத்தி ஒன்றைக் கையாள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றன. இலங்கைக்கு வழங்கிவரும் வரிச்சலுகைகளைத் தொடர்ந்தும் வழங்க வேண்டுமாக இருந்தால், அந்த நாடு மனித உரிமைகள் விடயத்தில் நல்ல முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்று நிபந்தனை விதிக்க மேற்குலக நாடுகள் திட்டமிட்டிருக்கின்றன. - இப்படி பிரிட்டனின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சர் மலோச் பிறவுண் பிரபு கூறியிருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

பிரிட்டனில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றிய அவர், ஐரோப்பிய ஒன்றியமும் பிரிட்டனும் இலங்கை அர்சின் மீது அழுத்தத்தைக் கொடுப்பதற்கான நியாயபூர்வமான சாதனமாக ஜி.எஸ்.பி. வரிச்சலுகை விவகாரத்தைக் கருதுகின்றன என்று குறிப்பிட்டார் எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கருத்தை வெளியிட்ட பிரிட்டிஷ் அமைச்சரே, இலங்கை தொடர்பான பிரிட்டனின் வெளிவிவகாரச் செயற்பாடுகளைக் கையாள்பவர். அத்துடன் அவர் ஈழத் தமிழர்களின் சமூகத்தின் மத்தியிலேயே இக்கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்.

ஆகவே,இலங்கையின் மனித உரிமை விவகாரங்களை நேர்சீர் செய்வதற்கான கருவியாக வரிச்சலுகை விடயத்தைத்தான் பயன்படுத்துவது என்பதே பிரிட்டனின் நிலைப்பாடு என்று எண்ணவேண்டியுள்ளது.

பிரிட்டனின் இந்த நிலைப்பாட்டை எண்ணும்போது தான், புற்றுநோயால் வாழ்வா, சாவா என்று போராடிக் கொண்டிருக்கும் நோயாளிக்குத் தலையிடி மருந்தைத் தீர்வாக - நிவாரணியாக - வழங்க முற்படும் வைத்தியர் பற்றிய விசனம் தமிழர்களுக்கு ஏற்படுகின்றது.

இலங்கையில் இனப்பிரச்சினை இன்று இத்தகைய ஆழமான விடயமாகப் புரையோடிப் போயிருக்கின்றமைக்கு - கால்கோள் - வித்து - இட்டவர்கள் பிரிட்டிஷாரே. இந்தப் பிரச்சினை உருவெடுத்தமைக்கான பொறுப்பில் கணிசமான பங்கு பிரிட்டிஷாரையே சாரும்.

இலங்கைத் தீவில் தமிழர் தேசியமும், சிங்களவர் தேசியமும் புவியியல் ரீதியாக வேறுபட்டு தனித்தனியாகக் காணப்படும் இரு வெவ்வேறு தாயகங்களில் தனித்தனி அரசுகளுடனும், தனித்தனியான மொழி, கலாசாரம், வழக்காறு, பண்பாட்டுக் கோலங்கள் ஆகியவற்றுடனும் சரித்திர காலம் தொட்டே விளங்கி வந்தன.

பதினாறாம் நூற்றாண்டின் பின்னர் இலங்கைத் தீவை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற அந்நியர்கள் ஆக்கிரமித்துத் தமது ஆதிக்கத்தின் கீழ் அதனைக் கொண்டுவந்தபோதும், இந்த இரு தேசங்களையும் - தேசியங்களையும் - தனித்தனி வெவ்வேறான நிர்வாகக் கட்டமைப்புகளின் கீழேயே ஆட்சி செய்தனர்.

அந்த ஆக்கிரமிப்பைப் பின்னர் அவர்களிடமிருந்து பிடுங்கிக்கொண்ட பிரிட்டிஷ் வெள்ளையர்கள், பின்பு 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தங்களது நிர்வாகக் கட்டமைப்பு வசதிக்காக இரண்டு தேசங்களையும் ஒன்றிணைத்து ஒரு பொது ஆட்சி முறையை அறிமுகப் படுத்தினர். இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இலங்கைத் தீவின் மீதான தமது ஆட்சி அதிகாரத்தைக் கைவிடும் வரை இந்த முறைமையைத் தொடர்ந்த பிரிட்டிஷார், தாங்கள் வெளியேறும்போது இலங்கைத் தீவில் தமிழர் தேசத்தினதும், தேசியத்தினதும் இறைமை என்ற குடுமியை நாட்டின் பெரும்பான்மையினரான பௌத்த - சிங்களவரிடம் அடிமைத்தளையாகப் பிடித்து ஒப்படைத்துவிட்டுச் சென்றனர்.

அந்த வினையின் விளைவையே இலங்கைத் தீவு இன்னும் - இன்றும் - அறுத்துக் கொண்டிருக்கின்றது.

பிரிட்டிஷ்ஷார் விட்டுச் சென்ற தவறினால் ஏற்பட்ட களேபரமே இன்று முற்றி பெரும் இனப்பிரச்சினையாகி,உள்நாட்டு யுத்தமாக வெடித்திருக்கின்றது.

அதன் விளைவாக, இன்று தமிழர்கள் மீது பெரும் கொடூர யுத்தமாக ஏவி விடப்பட்டிருக்கும் பேரினவாதத் திமிர்த்தனமே மோசமான மனித உரிமை மீறல்களுக்கும் அவர்களுக்கு எதிரான குரூர வன்முறைகளுக்கும் களம் அமைத்து நிற்கின்றன. பேரழிவு தரும் மனித உரிமை மீறல் வன்முறைகள் தமிழர் தாயகத்தை வாழ்வா, சாவா என்ற இறுதிக்கட்ட நெருக்கடிக்குள் ஆழ்த்தியிருக்க, அந்தப் பேரவலத்திலிருந்து தமிழ் மக்களை மீட்பதற்கு விரைந்து - ஆக்கபூர்வமான - உடன் பலன் தரக்கூடிய - நேர்த்தியான - அவசர - நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய பிரிட்டன், அதை விடுத்து சாவகாசமாக அதனைக் கையாளும் போக்குக் குறித்து விளம்புகிறது; விளக்க முற்படுகின்றது.

கனவான் போக்கில் செயற்படுவோரை கனவான் தனத்தில் அணுகலாம்; அந்த மார்க்கத்தில் திருத்தலாம். ஆனால் துன்மார்க்கத்தில் உழல்பவர்களைக் கனவான் போக்கில் அணுகித் திருத்தவே முடியாது. இது வெள்ளைக்கார கனவான்களுக்கு எப்போது புரியப்போகின்றது?

# வன்னிப் பெருநிலப் பரப்பிலிருந்து இடம்பெயரும் மக்கள் வவுனியா வந்து தங்குவதற்கான சூழல் இப்போது இல்லை

*அங்குள்ள நிலைகுறித்து யாழ்.ஆயர் விபரிக்கிறார்*



போர் நடவடிக்கைகள் காரணமாக வன்னிப் பெரு நிலப்பரப்பிலிருந்து இடம் பெயர்கின்ற மக்கள் வவுனியாவுக்கு வந்து தங்குவதற்கான சூழ்நிலை தற்போதைக்கு இல்லை என்று யாழ். மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் இடம் பெயர்ந்துள்ள மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடமை என்றும் ஆயர் தெரி வித்தார்.

கத்தோலிக்க திருச்சபையின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கொழும்புக்கு சென்ற ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, வவுனியா மற்றும் மடுத் தேவாலயம் ஆகியவற்றுக்கு கடந்த ஞாயிற்றுக் கிழமை சென்றுவிட்டு கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மீண்டும் கொழும்பு திரும்பினார்.

அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளி யிட்ட போதே ஆயர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை தொடர்பாக ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண் டகை மேலும் தெரிவித் ததாவது:-

மனிதநேய தொண்டு நிறுவனங்கள் வன்னிப்பெரு நிலப்பரப்பில் இருந்து வெளியேறியமை கவலை தருகின்றது. பாதுகாப்பு நெருக்கடிகளினால் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக் குகின்றனர்.

வன்னிப்பெரு நிலப்பரப்பில் இடம் பெயர்கின்ற மக்கள் வவுனியாவுக்கு வந்து தங்குவதற்கான சூழ்நிலை தற்போதைக்கு இல்லை.

இடம்பெயர்ந்துள்ள மக்கள் தற்போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற இடங்களில் தங்கியுள்ளனர்.

அவர்கள் 50 மைல் தூரம் வரை நடந்து வவுனியாவுக்கு வரமுடியாது. அதற்கான போக்கு வரத்து வசதிகள் எதுவும் அங்கு இல்லை. தற்போது போர் நடைபெறுகின்றது.

இந்நிலையில் மக்கள் அங்கிருந்து ஏ-9 பாதை ஊடாக வரமுடியாது.

ஆகவே, இடம்பெயர்ந்துள்ள மக்களை வவுனியாவுக்கு வருமாறு அரசாங்கம் தற்போதைக்கு அழைக்க முடியாது.

அதேவேளை, வவுனியாவுக்கு வருகின்ற மக்களுக்கு உரிய தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று இராணுவ அதிகாரிகள் என்னிடம் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியுள்ள முகாம்களை பராமரிக்கும் பொறுப்பு அனைத்துலக அரச சார்பற்ற நிறுவனங்களிடமும் கையளிக் கப்படும் எனவும் இராணுவ அதிகாரிகள் என்னிடம் உறுதியளித்துள்ளனர். இது தொடர்பாக இராணுவ அதிகாரிகள் என்னுடன் கலந்துரையாடினர்.

ஆனாலும் மக்கள் தற்போதைய நிலையில் வவுனியாவுக்கு வந்து தங்குவதற்கான நிலைமையில்லை. எனவேதான் வன்னிப்பெரு நிலப் பரப்பில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக் கான பாதுகாப்புக்களையும் மற்றும் நிவாரணங்களையும் அரசாங்கம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றேன்.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான அடிப்படை வசதிகளையும் உணவு மற்றும் மருந்துப் பொருள்களையும் வழங்குவதற்கு அனைத்துலக தொண்டு நிறுவனங்களும் உடனடியாக முன் வரவேண்டும் எனவும் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கோரிக்கை விடுத்தார். (50)

# குடாநாட்டின் ஏற்றுமதிப் பொருள்களை தென்பகுதிக்கு அனுப்பக் கட்டணம் அதிகரிப்பு

## உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிப்பு

வடமராட்சி, செப் 19

குடாநாட்டு உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம் போன்றவற்றை கப்பல் மூலம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான கப்பல் கட்டணம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் அரசுக்கு சொந்தமான கப்பல்கள் பொருள்களுடன் காங்கேசன்துறை வந்து அவற்றை இறக்கிவிட்டு திரும்பிச் செல்லும் போது குடாநாட்டு உற்பத்திப் பொருள்களை ஏற்றிச் செல்ல கூடியதாக இருந்தது.

தற்போது அரசுக்கு சொந்தமான கப்பல் சேவை இடம்பெறாத காரணத்தினால் தனியார் கப்பல்களிலேயே எடுத்துச் செல்ல வேண்டியதாக உள்ளதென்று கூறப்படுகின்றது.

தனியார் கப்பல்களின் கட்டணம் அதிகரிப்பினால் பொருள்களை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லும் செலவு அதிகரித்துள்ளதாகவும், இவற்றை ஏற்றிச் செல்லும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஒரு தொகுதி புகையிலை கடந்த வாரம் தனியார் கப்பல் ஒன்றின் மூலம் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-236)

# ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவின் கலை இலக்கியப் பெருவிழா இன்று நடைபெறுகின்றது

யாழ்ப்பாணம், செப் 19

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் தேசிய கலை இலக்கியப் பெருவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ் அரச அதிபர் கே.கணேஸ் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில், பிரதேச கலை இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களின் வில்லுப்பாட்டு, நாட்டுப் புறப்பாட்டு, கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் கல்லூரி மாணவர்களின் ஒயிலாட்டம், இணுவையூர் குமரநர்தனாலய மாணவர்களின் நிலுத்தியாஞ்சலி உட்படப் பல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

சிறப்பு நிகழ்வாகத் தேவாகலை கலாசார மன்றத்தின் தற்காப்பு கலை அறிமுக நிகழ்வும் இடம்பெறும். (203-325)

# 'ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியார்கள்' பேச்சுப்போட்டி கலைத்தூதுக் கலையகத்தில் நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம், செப் 19

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படுகின்ற 'ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியார்கள்' என்னும் தலைப்பிலான பேச்சுப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பேச்சுப் போட்டிக்கு விண்ணப்பித்து பங்குபற்றுவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்ட அனைவரையும் குறித்த நேரத்திற்கு சமூகம் தருமாறு திருமறைக் கலாமன்றம் கேட்டுள்ளது.

இளந்தலைமுறையினரிடையே பேச்சாற்றலை வளர்க்கும் முகமாக நடத்தப்படுகின்ற இந்தப் பேச்சுப் போட்டியில் முதல் பரிசாக 'கலை முகம்' சஞ்சிகை வழங்குகின்ற 10 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 'ஆற்றுகை' சஞ்சிகை வழங்குகின்ற 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள் ளதுடன், ஆறுதல் பரிசுகளும் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203)

# பகவத்கீதை உபந்நியாசம்

யாழ்ப்பாணம், செப் 19

கோண்டாவில் கிழக்கு நாராயண வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் பகவத் கீதை உபந்நியாசம் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் இந்த ஆத்மீக நிகழ்வில் இன்றைய தினம் கீதோபதேச வித்தகர் எஸ்.கே.என் தவராஜாவின் பகவத்கீதை உபந்நியாசமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும். (60)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 04 | 20.09.2008 |
| | சனிக்கிக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.இ. 04.40வரை |
| நட்சத்திரம் : | கார்த்திகை |
| | மு.இ. 6.41வரை |
| சுபநேரம் : | 03.02 - 04.32 |
| ராகுகாலம் : | 09.02 - 10.32 |

# வல்லிபுர ஆழ்வார் ஆலயப் பெருந்திருவிழா 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது



வடமராட்சி, செப் 19

வரலாற்றுச் சிறப்புமிக்க வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 29 ஆம்திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 17 தினங்கள் வரை நடைபெறவுள்ளது.

பெருந்திருவிழாவின் சிறப்புத் திருவிழாக்களான குருக்கட்டு விநாயகர் தரிசனம் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமையும், வெண்ணெய்த் திருவிழா 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும், துகில் திருவிழா 8 ஆம் திகதி புதன் கிழமையும், பாம்புத் திருவிழா 9 ஆம் திகதி வியாழக்கிழமையும், ஹம்சன் போர்த்திருவிழா 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், வேட்டைத் திருவிழா 11 ஆம் திகதி சனிக்கிழமையும், சப்பறத்திருவிழா 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் இடம்பெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட் கிழமை தேர்த்திருவிழாவும், 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும், 15 ஆம் திகதி புதன்கிழமை கேணித் தீர்த்தமும், கொடியிறக்கமும் நடைபெறும்.

பெருந்திருவிழாக் காலத்தில் தினமும் காலைப்பூசை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி வசந்தமண்டபப் பூசை காலை 9.30 மணி, உச்சிக்காலம் பகல் 12 மணிக்கும் இடம்பெறும்.

மாலைப்பூசை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி வசந்தமண்டபப்பூசை மாலை 3.10 மணி, அர்த்தசாமப்பூசை மாலை 4 மணிக்கும் இடம்பெறும்.

ஆலய பிரதம குருக்களான பிரம்மஸ்ரீ கே. சுதர்சனக் குருக்கள், பிரம்மஸ்ரீ கே. புருஷோத்தமக் குருக்கள் ஆகியோர் பெருந்திருவிழாவை நடத்தி வைப்பார்கள்.

ஆலய மடத்திலும், அருகிலுள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்திலும் திருவிழாக்காலத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

திருவிழாக்காலத்தில், பருத்தித்துறை மந்திகை ஊடாக வல்லிபுரக் கோயில், பருத்தித்துறை தும்பளைஊடாக வல்லிபுரக் கோயில், யாழ்ப்பாணம் வல்லிபுரக் கோயில் ஊடாக பருத்தித்துறை ஆகிய மூன்று பாதைகளில் விசேட பஸ்சேவைகள் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (203-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு விற்பனை செய்த நபருக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதம்

மந்திகை, செப்.19

துன்னாலையில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்துள்ளது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது குறிப்பிட்ட நபர் கசிப்பு விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அவரிடமிருந்து கசிப்பு, கசிப்பு உற்பத்திப் பொருள்கள், உபகரணங்கள் ஆகியவற்றையும் மதுவரித் திணைக்களத்தினர் மீட்டுள்ளனர்.

கசிப்பு விற்பனையின் போது கைது செய்யப்பட்ட நபர் பருத்தித்துறை நீதிபதி கே.அரியநாயகம் முன்னிலையில் விசாரணைக்காக ஆஜர் செய்யப்பட்டபோது குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து நீதிபதி ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

(203-218)

# ஆதீ அந்தம் அற்றது இந்துமதம்

இந்துமதம் ஆரம்பமோ முடிவோ இல்லாத ஒற்றையடிப் பாதையைப் போன்றது. பரந்தபூமியில் நாம் எங்கெங்கு ஆரம்பிக்கிறோமோ அதுதான் அந்தப் பாதைக்குத் தொடக்கம். எங்கெங்கு போய் நிறுத்துகிறோமோ அதுதான் அதன் முடிவு.

ஒற்றையடிப்பாதை நடக்க நடக்கத்தான் ஒளி விட்டுப் பிரகாசிக்கும். அதுபோல இந்து சமயமானது மனிதர்களுக்குச் சொல்லப்பட்ட கடமைகளைச் செய்யச் செய்யத்தான் நன்றாக வளர்கிறது. ஒற்றையடிப் பாதையில் விபத்துக்களோ, நெரிசல்களோ, திடீரென்று முடிவடையாமல் நின்றுவிடுவதோ கிடையாது. அதே போல இந்து சமயமும் விபத்தில்லாமல் ஒழுங்காக, கட்டுப்பாடாக, சந்தேகமில்லாமல் ஒரு லட்சியத்தோடு செல்லக்கூடியது. ஒற்றையடிப் பாதையில் குறுக்கீடுகள் இருக்கலாம். ஆனால் அது முடிவதில்லை. அதைக் கடந்தபின் தொடர்ந்து செல்கின்றது. இந்து மதமும் அப்படிப்பட்டதுதான். எப்போது ஒற்றையடிப் பாதையில் நடக்கவில்லையோ, அப்போது அந்த ஒற்றையடிப் பாதை மறைந்துவிடும். ஆனால் அழிந்துவிடாது. அதுபோல இந்து சமயமானது கடமைகளைச் செய்துவரச் செய்துவரப் பிரகாசிக்கும். செய்யாமல் இருக்கும்போது மறைந்தது போலத் தோன்றும்.

ஞானக்கதிர்

எங்கும் நிறைந்துள்ள ஆகாயத்தை மேகங்கள் மறைப்பதுபோல, எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளின் தத்துவத்தைப் பற்றிச் சொல்லக்கூடிய இந்துசமயம், மேகம் போலச் சிற்சில தீயசக்திகளால் மறைக்கப்பட்டது போலத் தோன்றும். மேகங்கள் விலகினால் ஆகாயம் நன்றாகத் தெரிவது போல, அந்தத் தீயசக்திகள் விலகியதும் இந்துசமயம் நன்றாகச் சுவர்க்கமாகத் தெரியும். ஒளியுடன் பிரகாசிக்கும்.

முதன் முதலில் இந்துசமயத்தைப் பரப்ப விரும்புகிறவர்கள், முக்கியமாகத் தங்கள் வாழ்க்கையைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். தீயனவற்றைக் கேட்கக்கூடாது, பார்க்கக்கூடாது, பேசக்கூடாது, உண்ணவும் கூடாது. தீயனவற்றைப் பொழுது போக்கிற்காக நாம் நமது வாழ்க்கையில் சேர்த்துக் கொண்டாலும், அதன் பயனாக நாம் நம்மை அறியாமல் அதன் விளைவுகளைப் பெற்று விடுகின்றோம். ஆகவே, அவற்றைத் தவிர்த்து நல்லமுறையில் வாழ முயலுவதே இந்துக்கள் தமது மதம் வளரச் செய்யும் மிகப் பெரிய தொண்டாகும்.

நன்றி: ஞானபூமி


முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



இ.அஸ்வின் 19.09.2008

சுவிஸ்சர்லாந்தை வசிப்பிடமாகக் கொண்ட R. இராஜசேகர் – தர்மினி தம்பதியரின் தவப்புதல்வன் அஸ்வின் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (19.09.2008) சுவிஸ்சர்லாந்திலுள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகின்றார். அஸ்வின் இறையாசியுடன் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்: பப்பா, மம்மி, Grand Mummy, பாட்டா, சுரேஸ் பெரியப்பா, பெரியன்ரா(பிரான்ஸ்), ராஜ் சின்னப்பா, சின்னன்ரா(பிரான்ஸ்), லக்கி சித்தா, அன்ரா, நிரோ சித்தா, தவம் மாமா, மாமி (சுவிஸ்), சிங்கம் மாமா, மாமி(லண்டன்), குணம் மாமா, மாமி (சுவிஸ்), மல்லிகாப் பெரியம்மா, பெரியப்பா(ஜேர்மனி), மருதம் பெரியம்மா, பெரியப்பா, அக்காமார்கள், அண்ணாமார்கள், மச்சாள்மார்கள், மச்சான்மார்கள்.

36, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (78361)

தகவல்: இரா. இராஜல[illegible]


# வாசகர் திருமுகம்

## டயலொக் அலைவரிசை விஸ்தரிக்கப்படுமா?

யாழ்ப்பாணத்தின் பல பகுதியிலும் டயலொக் நிறுவனத்தினரின் அலைவரிசை போதியளவாக உள்ளபோதிலும் சுன்னாகத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலும் அந் நிறுவனத்தின் அலைவரிசை மிகவும் குறைந்தளவே காணப்படுகின்றது. இதனால் பலரும் தங்கள் தொலைபேசிகளை வெளியான இடங்களிற்கும் சற்று அலைவரிசை கூடிய பகுதிகளுக்கும் கொண்டு சென்று கதைப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

எனவே சுன்னாகமும் அதனை அண்டிய பகுதிகளினதும் மக்களும் டயலொக் நிறுவனத்தின ரின் அலைவரிசை விஸ்தரிக்கப்படமாட்டாதா என அங்கலாய்க்கின்றனர். எனவே இவ் விடயத்தை சம்பந்தப்பட்ட நிறுவனமும் அதன் அதிகாரிகளும் கவனத்தில் கொண்டு செயற்படுவார்களா? இவ்வேண்டுகோளைச் செவிசாய்த்து மிக விரைவில் அலை வரி சையை விஸ்தரிக்கச் செயற்படுவார்களா எனச் சுன்னாகம் மக்கள் சார்பில் வேண்டிக் கொள்கின்றேன்.

சுன்னாகம். கே.மதன்.

## கத்தோலிக்க மக்களைப் பின்பற்றி இந்து ஆலயங்களும் வன்னி மக்களுக்கு உதவக் கூடாதா?

வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில்- சொல்ல முடியாத துயரங்களுக்கும்- துன்பங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு, இருக்க இடமின்றி அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லற்படும் செய்தி கேட்டு துயரமடைந்த யாழ்.ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் அவர்கள் கத்தோலிக்க மக்கள் அனைவரையும் நிதி உதவி செய்யுமாறு தேவாலயங்கள் மூலமாக அழைப்பு விடுத்துள்ள செய்தி இன்றைய இக்கட்டான நிலையில் வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

வன்னி மாவட்டத்தில் உள்ள மாந்தை கிழக்கு, துணுக்காய், மடு, வவுனியா வடக்கு ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள மக்கள் முற்றாகவே இடம்பெயர்ந்துள்ளார்கள். இவர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். சுமார் 2லட்சம் மக்கள் இவ்வாறாக நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது எல்லோர் மனங்களை உறையவைத்துள்ளது.

இந்த வகையில் சுனாமி அனர்த்தத்தின் போது முல்லைத்தீவு மக்களுக்கு உதவிய அதே கத்தோலிக்க மக்கள் மீண்டும் ஒரு முறை வன்னி மக்களுக்கு உதவ முன்வந்திருப்பதையிட்டு பெருமையடைய வேண்டியவர்களாக உள்ளோம்.

யாழ்.குடாநாட்டில் சுமார் 1,000 வரையான கத்தோலிக்க ஆலயங்களே இருந்த போதிலும் அந்த ஆலயங்கள் சார்பாக முல்லைத்தீவு மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகளையும்- கத்தோலிக்க ஆயர்களால் துன்பப்பட்ட அம்மக்களுக்கு இரவு பகலாகச் செய்யப்பட்ட சேவைகளையும் அம்மக்கள் மறக்கப் போவதில்லை. அப்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்த சுனாமி அகதி முகாங்கள் 30இற்கு மேல், இதில் கத்தோலிக்க ஆயர்களின் சேவை சகல முகாங்களிலும் விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இன்றைக்கு யாழ்.குடாநாட்டிலே 2700 இற்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் இருந்த போதிலும், இம் மதத்தின் தலைமைப் பீடங்களான இந்து மாமன்றங்கள்- ஆதீனங்கள் இருக்கின்ற போதிலும், இவை வன்னியிலே அகதிகளாக துன்பப்படுகின்ற மக்களுக்கு உதவ முன்வராதது ஏன்? சுனாமி அனர்த்தத்தின் போதும் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயங்கள் முல்லைத்தீவு மக்களுக்கு உதவாமல் மௌனம் சாதித்த கறைபடிந்த வரலாற்றையும் மறக்க முடியாது? கத்தோலிக்க ஆலயங்களின் சேவை மனப்பான்மை இந்து ஆலயங்களுக்கு ஏன் வரக்கூடாது?

ஆண்டவனின் பெயரால் இந்து ஆலயங்களில் மக்களிடம் இருந்து காணிக் கையாகப் பெறும் பெருந்தொகைப் பணத்தை எங்கள் சொந்த உறவுகளுக்கு பயன்படுத்தக் கூடாதது ஏன்? கத்தோலிக்க ஆலயங்களையும் அவற்றின் வணக்கத்துக்குரிய குருவானவர்களையும் போன்று இந்து மதமும் அதன் ஆலயங்களும் செயற்படுமா?

கல்வியங்காடு. வே.ம.இந்திரநாதன்.

## எல்லா வைத்திய நிபுணர்களும் இவர்களைப் பின்பற்றினால் வைத்தியசாலை சொர்க்க பூமியாகும்

காலில் சத்திரசிகிச்சை பெறுவதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பதினேழாம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். காலை 6.30 மணிக்கு சத்திர சிகிச்சை நிபுணர் வார்ட்டிற்கு வருகை தந்தார். சகல அலுவலர்களும் தத்தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். சத்திரசிகிச்சை நிபுணர் கண்டிக்க வேண்டிய இடத்தில் கண்டித்தும் கருணை காட்ட வேண்டிய இடத்தில் கருணை காட்டியும் நிர்வாக ஒழுங்குகளைச் சிறப்புற நடத்திக் கொண்டிருந்தார். நோயாளிகளிடம் மிகவும் இரக்க சுபாவத்துடன் கதைத்தும், தான் கூறியபடி நடக்காதவர்களுக்கு நல்ல அறிவுரை புகட்டியும் நடந்து கொண்டிருக்கின்ற தன்மை மிகவும் போற்றுதற்குரியதாகும். இவருக்கு உதவியாக நின்று உதவுகின்ற வைத்திய நிபுணரும் இச்சத்திரசிகிச்சை நிபுணரின் நோக்கங்களை நிறைவேற்றுகின்ற தன்மையுடன் நடந்து கொள்வதை அவதானிக்க முடிந்தது.

எனது காலின் எலும்பு மற்றும் நரம்பு ஆகியவற்றில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டி ஏற்பட்டது. நான் மிகவும் பயந்துகொண்டு சத்திரசிகிச்சைக்குச் சென்றபோது எனது மனதைத் தென்படையச் செய்து சத்திரசிகிச்சையில் வெற்றி கண்டார் சத்திர சிகிச்சை நிபுணர். தற்போது நான் மிகவும் சுலபமாக நடக்கிறேன்.

எனக்கு முள்ளந்தண்டிலும் சத்திரசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வேண்டிய ஒழுங்குகளையும் இவ்எலும்புக்குரிய சத்திரசிகிச்சை நிபுணரே மேற்கொண்டார். இதற்காக எனது உடல் நிலை சகல விதத்திலும் சரிவர உள்ளதா என்பதைப் பரிசோதனை செய்வதற்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 2ஆம் வார்ட்டிற்குரிய வைத்திய நிபுணரின் உதவியை நாடியிருந்தார் சத்திரசிகிச்சை நிபுணர். 2ஆம் வாட்டிற்கு வைத்திய நிபுணரும் எனக்கு வேண்டிய சகல பரிசோதனைகளையும் மேற்கொள்வதற்காக 2ஆம் வார்ட்டில் எனக்கு அனுமதி அளித்தார். அங்கும் நிர்வாக ஒழுங்குகள் மிகவும் சிறப்பாகவே அமைந்துள்ளன. சகல அலுவலர்களும் தமது கடமைகளை மிகவும் திருப்தியாகவே செய்தார். 2ஆம் வார்ட்டின் வைத்திய நிபுணர் அவர்களும் மிகவும் பரிவோடு எனது நிலைப்பாடுகளைக் கேட்டறிந்து எனக்கு வேண்டிய சகல பரிசோதனைகளையும் செய்வித்து, இவைபற்றிய தமது அறிக்கையையும் சமர்ப்பித்து எனது சத்திரசிகிச்சைக்குரிய முன் ஒழுங்குகளாக இவற்றைச் செய்து எனக்கு உதவியுள்ளார்.

இவ்விரு வார்ட்டுகளிலும் நான் நேரில் அறிந்தவரையில் வைத்திய, சத்திரசிகிச்சை நிபுணர்கள் நேர காலம் பாராது- பகலிரவு, விடுமுறை என்றெல்லாம் நோக்காது தமது கடமை நேரம் மட்டும்தான் சேவையென அடம்பிடிக்காது எந்தநேரம் ஆயினும் சேவைக்குச் சமுகம் அளித்து அவசிய தேவை கருதி சேவையாற்றுவது போற்றுதற்குரியதாகும். இதற்கேற்றாற் போல் அங்குள்ள அலுவலர்களும் சேவையாற்றுகின்றனர்.

யாழ்ப்பாண மக்களுக்கு இத்தகைய வைத்திய நிபுணர்கள் நீண்ட காலமாக இல்லாதிருந்த போதிலும் தற்போது இத்தகைய நிபுணர்கள் அரிய சேவைகள் ஆற்றுவது கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும்.

இவ்விரு வார்ட்களிலும் தன்மைகளை அறியும் நான் மற்றைய வார்ட்டுக்களிலும் சேவையாற்றுகின்ற சத்திரசிகிச்சை நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள், மற்றும் அங்கெல்லாம் சேவையாற்றுகின்ற மற்றும் அலுவலர்கள் யாவரும் உத்தம சேவையாளர்களாகவே இருப்பர் என எண்ணுகின்றேன்.

இவற்றுக்கெல்லாம் காரணமாயிருக்கின்ற யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் மேம்பட்ட நிர்வாகத்தையும் அவற்றின் சேவையையும் நாம் பாராட்டாதிருக்க முடியாது.

சிகிச்சை பெற்ற ஒரு நோயாளி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நன்னடத்தைப் பரிந்துரை பரிசீலிக்கப்படாமல் நளினியின் விடுதலைக் கோரிக்கை நிராகரிப்பு

## அவரது சட்டத்தரணி நீதிமன்றில் எடுத்துரைப்பு

சென்னை, செப். 19

நன்னடத்தை அதிகாரியின் பரிந்துரையைப் பரிசீலிக்காமல், ராஜீவ் கொலை வழக்கில் ஆயுள் தண்டனைபெற்ற நளினி யின் விடுதலைக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு அவரது வழக்கறிஞர் துரைசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியாக 17 ஆண்டுகளாகச் சிறையிருப்பதால் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி, 2006, 2007ஆம் ஆண்டுகளில் தனித் தனியாக மனுச் செய்தார். இந்த மனுக்கள் ஆலோசனைக் குழுவால் தள்ளுபடி செய்யப்பட்டன. இதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் நளினி வழக்குத் தொடர்ந்துள்ளார். வழக்கு விசாரணை நீதிபதி நாகமுத்து முன்னிலையில் நேற்று முன்தினம்புதன்கிழமை நடைபெற்றது. நளினி தரப்பில் வழக்கறிஞர் துரைசாமி ஆஜராகி வாதாடுகையில் கூறியவை வருமாறு:-

''நளினியின் ஆயுள் தண்டனை வரும் 2011ஆம் ஆண்டோடு முடிவடைகிறது. அதற்கு முன் நன்னடத்தை அடிப்படையில் விடுவிக்கக்கோரி 2006இல் மனுத்தாக்கல் செய்தார். இதுகுறித்து பரிசீலிக்க, சிறை விதிகளின்படி பொலிஸ் ஐ.ஜி., தலைமை குற்றவியல் மாஜிஸ்திரேட் உள்ளிட்டோர் அடங்கிய 7 பேர் குழு அமைக்கப்படவில்லை.

நளினியின் மனுவை பரிசீலிக்க சரியான முறையில் குழு அமைக்கப்படவில்லை. அதோடு, இந்தக் குழு குற்றவாளியின் பின்னணி, கொலை நடந்த சூழல், சிறையில் அவரது நடத்தையில் காணப்பட்ட மாற்றம் ஆகியவை குறித்து ஆராயவில்லை. அதற்குப் பதிலாக குற்றத்தின் தன்மையை மட்டுமே பார்த்து ஆயுள் கைதியின் மனுவை நிராகரித்துள்ளது. அதே நேரத்தில், நன்னடத்தை அதிகாரி கடந்த 2005 ஆம்ஆண்டுஜூலையில், கடுமையான நிபந்தனைகளுடன் நளினியை முன்கூட்டியே விடுவிக்கலாம் என்று பரிந்துரைத்துள்ளார். அந்தப் பரிந்துரை ஆய்வு செய்யப்படவில்லை.

நளினியின் கோரிக்கையைப் பரிசீலிக்க ஆலோசனைக்குழு கடந்த 28.02.2006ஆம் திகதி கூடியுள்ளது. ஆனால், ஆலோசனைக் குழுவின் பரிந்துரையை ஏற்று, நளியினின் கோரிக்கையை நிராகரிப்பதாக அதற்கு முந்தைய தினமே சிறைத்துறை கண்காணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார். இந்தமுடிவு ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது'' - என்றார். (அ-ஒ)

## களனி பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மோதல்

களனி பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மற்றும் விஞ்ஞானபீட மாணவர் குழுக்களுக்கு இடையில் நேற்றுக் காலை 10.45 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதில் ஆறு மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

மோதலை கட்டுப்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவினரும் விரிவுரையாளர்களும் முயற்சித்தும் பயனளிக்கவில்லை. இதனையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் பொலிஸாரின் உதவியை நாடியுள்ளது.

அதனையடுத்து கிரிபத்கொடைப் பொலிஸார் பல்கலைக்கழகத்திற்குச் சென்று மோதலை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர் என்றும் இதன்போது மாணவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் மேற்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது. (சி)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

எழுது பாடசாலை ஆசிரியர் திரு ந.விஜயகுமார் அவர்களின் அன்புத் தாய்

திருமதி **நாகேஸ்வரி நடராசா** அவர்கள்

18.08.2008 அன்று சிவபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்களது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை நடைபெறும் 31 ஆம் நாள் நினைவு தினத்தில் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

*அதிபர், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை, பழைய மாணவர் சங்கம்.*

*யா/ கரம்பொன் சண்முகநாத ம.வி, ஊர்காவற்றுறை.*

## மரண அறிவித்தல்கள்

### கணேசையா காமாட்சியம்மா



நீர்வேலி காமாட்சியம்பாள் கோவிலடியைச் சேர்ந்த திருமதி கணேசையா காமாட்சியம்மா 15.09.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - செல்லையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா கணேசையாவின் அன்பு மனைவியும், புஸ்பவதி செளந்தரராஜன், பேரின்பநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் வளர்ப்புத் தாயாரும், சகுந்தலாவின்(ஜேர்மனி) மாமியாரும், தூபிரா, சிந்தூரன், ஆரூரன் (ஜேர்மனி), சாருகா, நிலக்ஷன், தர்சிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, நீர்வேலி வடக்கு சிவியாக்காடு இந்து மயானத்தில் தகனக்கரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*காமாட்சியம்பாள் கோவிலடி,*
*நீர்வேலி வடக்கு,*
*நீர்வேலி.*

தகவல்:
புஸ்பவதி செளந்தரராஜன்
(பெறாமகள்)

### பாடகர் சின்னன் சின்னத்துரை



ஆனந்தா வீதி, மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்கொண்ட சின்னன் சின்னத்துரை நேற்று (18.09.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னன் - முத்து தம்பதியினரின் அன்பு மகனும் நேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பசுபதி, அன்னம், செல்லம்மா, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தேவமலர் (மல்லிகா), றஜனி (ஆதார வைத்திய சாலை, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சாந்திராஜாவின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் சதீஸ்குமார், கீர்த்திகா (பிரான்ஸ்), தினேஸ்குமார் (இந்தியா), தாட்சாயினி - சுதன் (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.09.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***ஆனந்தா வீதி,***
***மானிப்பாய்.***

(78582)

*தகவல்:*
**குடும்பத்தினர்**

## தவறிவிட்டது

''இந்திரகிரி'', வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை என்ற முகவரியுடைய திருமதி கானகோகிலம் ஜெயம் என்பவரின் தே.அ. அட்டை (656641924V), விசேட அ.அட்டை, ஆசிரிய அ. அட்டை என்பன செல்வச் சந்நிதி ஆலய தேர்த் திருவிழாவில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியில் தந்தோ, அனுப்பியோ உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

**இந்திரகிரி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.**

## தவறிவிட்டது

தாவளை, இயற்றாலை, 'வரணி என்னும் முகவரியைச் சேர்ந்த பொன்னையா சூரியகுமார் என்பவரது தேசிய அ.அட்டை (691800890v) 09.09.2008 அன்று கொடிகாமத்திற்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே. செல்வராசா, ஐங்கரன் வெதுப்பகம், சாவகச்சேரி என்னும் முகவரியில் ஒப்படைத் துதவீவும்.

## தவறிவிட்டது

62A/3 வைமன் வீதி, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கார்த்திகா என்பவரது தேசிய அ.அட்டை (875983750v) 16.09.2008 அன்று நல்லூருக்கும் அரசடிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்து தவவும்.


A/L 2008 பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு

DMI கல்வி நிறுவனமானது, அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளுக்கு விசேட கட்டணச்சலுகையை வழங்குகின்றது.

Diploma in Microsoft Office
Diploma in PC Application
Adv. Dip. in Hardware & Networking
Diploma in Computerized Accounting
Dip. in Pre-Press Desktop Publishing
Dip. in Web Designing & Development
Dip. in Video Production & Multimedia

வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான கணக்கீட்டு மென்பொருள் கற்கைநெறி
Tally
#Quick Books
# MYOB
# Accpack
JOIN WITH LEADERS IN ACCOUNTS

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
19/09/2008, 20/09/2008, 22/09/2008, Time : 10.00 a.m.

DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

The members of the
*Jaffna College Staff Tennis Club*
Cordially invite
to the final of the
*Luther Selvarajah*
*Memorial Annual Tennis Tournament*
(From 21st August - 20th September)
On saturday the 20th Sep. 2008 at 9 am
at Jaffna College
and to the prize Distribution there after under the
distinguished patronage of
Mr.E.S.Nagaratnam
Proprietor E.S.P & Co
Principal

B. Sc. in Comp. Sc.
New Batch ஆரம்பம்
Weekend Batch யாழ்ப்பாணத்தில்
சனிக்கிழமை 20-09-2008 அன்று
Weekday Batch சங்கானையில்
திங்கட்கிழமை 22-09-2008 அன்று
எமது நிறுவனத்திலேயே வேலைசெய்துகொண்டே
B. Sc. in Comp. Sc.
படித்துப் பட்டதாரியாக முடியும்.
நீங்கள் கற்கைநெறிக்கு பதிவுசெய்த உடன் வேலை வழங்கப்படும்
Fast Track Batch
HND, Diploma, BIT, படித்தவர்களுக்காகவும்
பட்டதாரியல்லாத கணினித்துறைசார் வல்லுனர்களுக்காகவும்
பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்!
எமது நிறுவனத்தின் ஆலோசகர்கள்
Dr.P.Balasundarampillai (முன்னாள் துணைவேந்தர் யாழ். பல்கலைக் கழகம்)
Prof.A.Shanmugadas
ஆகியோரின் உயரிய வழிகாட்டலில்
NORTH LANKA IIT
Main Street, Chankanai. 060 221 4305
New College of Higher Studies No. 95, Ariyakulam, Jaffna.

B. Sc. in Multimedia
இக் கற்கைநெறியானது.............
ஒரு வருடம் யாழ் / கொழும்பிலும்
2ம் 3ம் வருடம் வெளிநாட்டில் பின்வரும் பல்கலைக் கழகங்களில் ஏதாவதொரு இடத்திலும் பயில முடியும்
the UNIVERSITY of GREENWICH
East London College
SAXION Universities of Applied Sciences
eie
எமது இணைநிறுவனத்தின் ஊடாக 2008ல் வெளிநாடு சென்றோர்

வெளிநாடு செல்வதற்கான விசா
பகுதி நேர வேலைவாய்ப்பு
2 மாதத்தினுள் Resident Permit Approval
தங்குமிட வசதி பெற்றுத்தரப்படும்.
NOTTINGHAM COLLEGE OF LONDON
உடன் இணைந்து.........


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளை இந்தியா ஏன் தடை செய்ய வேண்டும்?

## அரசிடம் விளக்கம் கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு, செப். 19

"தமிழீழ விடுதலைப் புலிகளை ஏன் இந்தியாவில் தடை செய்யவேண்டும் என்பது குறித்து மத்திய அரசு விளக்கமளிக்க வேண்டும்."

- இவ்வாறு விசேட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என இந்தியாவின் இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

விடுதலைப் புலிகள் தடைசெய்யப்பட வேண்டியதற்கான காரணிகளை முன்வைக்குமாறு வீக்ரம்ஜித் சிங் தலைமையிலான் நீதிவான் குழு மத்திய அரசிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளது.

ஆதாரத்துடன் - நியாயமான காரணிகள் முன்வைக்கப்பட்டால் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடை இன்னும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்படும்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய எல்லைக்குள் தமது போராட்டங்களை முன்னெடுக்காமையால் அந்த அமைப்பை தடை செய்ய முடியாதென விடுதலைப் புலிகள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் இறைமைக்கு பங்கம் ஏற்படக்கூடிய எந்தவொரு செயற்பாட்டையும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவில்லை எனவும் அந்த வாதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

## மட்டு. நகரில் தேடுதல்; 11 பேர் கைதாகினர்

மட்டக்களப்பு, புதிய கல்முனை வீதியிலிருந்து வாவிகாரை அடங்கலான நாவற்குடா, கல்லடி, மஞ்சள் தொடுவாய் மற்றும் நொச்சிமுனை ஆகிய பகுதிகளில் பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து பெரும் சுற்றிவளைப்புத் தேடுதலை நடத்தினர். இதன்போது 11பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சுற்றிவளைப்பு நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. கைதுசெய்யப்பட்டவர்கள் பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## ஏ-9 வீதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கற்சிலைமடுவைச் சேர்ந்த மூன்று பிள்ளை களின் தந்தையான யோகநாதன் (வயது - 30) மற்றும் வட்டக்கச்சியைச் சேர்ந்த பஸ் சாரதியான நான்கு பிள்ளைகளின் தந்தை எஸ்.சசிசங்கர் (வயது - 32) ஆகியோர் அடையாளம் காணப்பட்டனர். மற்றொருவர் நேற்றுமாலைவரை அடையாளம் காணப்படவில்லை. சடலங்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்தன.

லலிதாராணி (வயது - 29), பரண்திா (வயது - 21), தேவநாயகம் (வயது - 40) மற்றும் கேதீஸ்வரன் (வயது - 28) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஏ- 9 வீதியில் கொக்காவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 5.10 மணியளவில் நோயாளரை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் அம்புலன்ஸ் சிறிய சேதத்துடன் மயிரிழையில் தப்பித்துக்கொண்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரு தாக்குதல்களையும் இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைப்பிரிவினரே நடத்தினர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். எனினும் இதனை இராணுவத்தரப்பு வன்மையாக மறுத்தது. "குறித்த சம்பவங்கள் இடம்பெற்றன என்று கூறப்படும் இடத்திலிருந்து வெகு தொலைவிலேயே படையினர் நிலை கொண்டிருக்கின்றனர். இது படையினர் மீது சேறு பூசுவதற்காக அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றபுனைகதை" - என்று இராணுவ அதிகாரிகள் கூறினர்.

(அ-சி)

## படையினர் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 பேர் காயமுற்றதாகவும் ஊர்ஜிதப் படுத்தபடாத தகவல்கள் தெரிவித்தன.

புதன்கிழமை இரவுச் சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை கனகம்புளியடி, சரசாலைப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் இடம்பெற்றன. (அ-1)

## 5 ஆண்டுகளுக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களுக்குச் சென்று பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித்குணசேகர நேற்றுத் தெரிவித்திருக்கிறார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறிவை வருமாறு:-

பதிவு செய்ய வரும் மக்கள் பிறப்புச் சான்றிதழ் உள்ளிட்ட ஏதாவது ஒரு ஆவணத்தைக்கொண்டுவந்தால் மட்டும் போதும் -

நாம் மக்களுக்கு தொந்தரவு எதனையும் கொடுக்கவில்லை. கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் எத்தனைபேர் வந்து தங்கியுள்ளார்கள் என்பது எமக்குத் தெரியாது. இதன் காரணத்தினாலேயே தங்கியிருப்பவர்களைக் கணக்கிட வேண்டிய தேவை எமக்கு உள்ளது.

அதனால்தான் இப்பதிவுகளை மேற்கொள்கின்றோம் என்றார் பொலிஸ் ஊடகப் பேச்சாளர்.

இதேவேளை, நேற்றிரவு கொழும்பின் பல பகுதிகளில் பொலிஸார் ஒலிபெருக்கி மூலம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்களை விடுத்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## புங்குடுதீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று கவிழ்ந்ததில் நான்கு பெண்களும் ஆண் ஒருவரும்இரண்டு குழந்தைகளும் கடலில் மூழ்கி உயிரிழந்திருந்தனர் என்று தமிழகச் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. அவர்களில் நான்கு பெண்களின் சடலங்கள் 16 ஆம் திகதி நயினாதீவு, நெடுந்தீவு கரையோரங்களிலும் ஆண் ஒருவரின் சடலம் நேற்று புங்குடுதீவுக் கரையிலும் ஆண்குழந்தை மற்றும் சிறுமி ஆகியோரின் சடலங்கள் நேற்றுநெடுந்தீவுக்கரையிலும்மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட சடலங்களின் கைகளில் சிவப்பு நிற நூல்கள் கட்டப்பட்டிருந்தன. அவற்றைக் கொண்டு சகலரும் குறிப்பிட்ட படகில் பயணித்தவர்கள்என்றே கருதப்படுகிறது என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

மீட்கப்பட்ட ஒரு பெண்ணின் சடலம் மானிப்பாய், சுதுமலையைச் சேர்ந்த பூமணி நவரத்தினம் (வயது 68) என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரது சகோதரன் தெய்வேந்திரன் (வயது 55)சடலத்தை அடையாளம் காட்டினார்.

இந்தியா சென்றிருந்த தமது சகோதரியுடன் ஒரு வருடமாக தொடர்பு இருக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அவரது முன் வரிசைப் பல் சிறியதாக இருந்ததாகவும் சிறுவயதில் வெடி கொளுத்திய போது ஏற்பட்ட காயத்தினால் ஒரு விரல் செயலிழந்து மடிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் அவற்றைக் கொண்டே சடலத்தை அடையாளம் காணக்கூடியதாக இருந்ததாகவும்நீதிமன்றில் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகளை நடத்திய ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் சடலத்தை சகோதரனிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

## உணவு லொறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த வாகனத் தொடரணி நேற்று இராணுவத்தினரின் ஷெல் வீச் சுக்கு இலக்கானது. இதில் லொறிச் சாரதி யான எம்.குணரட்ணம் என்பவர் காய மடைந்தார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் ஏ-9 வீதியில் மாங்குளத்துக்கும் புளியங்குளத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இந்த வாகனத் தொடரணி ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஓமந்தை சோதனைச் சாவடியில் தடுத்து நிறுத்தப்பட்டிருந்த இந்த உணவு லொறிகள் நேற்றுக் காலையிலேயே வன்னிக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடூர யுத்தத்தாலும் -

மனிதப் பேரவல நெருக்கடி ஏற்பட்டிருப்பதாக இணைத் தலைமைகளில் சில தரப்புகள் கருதுவதால், அவற்றின் அழுத்தத்தின் பேரில் இவ்வளவு அவசரமாக இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவி வழங்குவது பற்றி ஆராய்வதற்காக 2003 இல் டோக்கியோவில் நடைபெற்ற கூட்டத்தில், அதன் இணைத் தலைமைகளான ஜப்பான், நோர்வே, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன தெரிவு செய்யப்பட்டிருந்தன.

அதில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதித்துவத்தை தற்போது அதன் தலைமைப் பொறுப்பை வகிக்கும் பிரான்ஸ் பிரயோகித்து வருகின்றது.

### ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவும் அழுத்தம்

இந்த நான்கில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அழுத்தத்தின் பேரிலேயே இம்முறை கூட்டம் இவ்வளவு அவசர அவசரமாக அழைக்கப்படுகிறது எனத் தெரிகிறது.

ஏற்கனவே வன்னியில் அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கைகளால் சுமார் இரண்டு லட்சம் பேர் ஏதிலிகளாகித் தவிக்கையில் -

மேலும் தீவிரமடைந்துவரும் யுத்தத்தால் புதிதாகப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் ஏதிலிகளாக மாறும் ஆபத்து நீடிக்கையில் -

வன்னியிலிருந்து மனித நேயத் தொண்டுப் பணியாளர்களைக் குறுகிய கால அறிவிப்போடு அரசு வெளியேற்றியமை வன்னியில் மிக மோசமான மனிதப் பேரவல நிலைமையை ஏற்படுத்தும் என்று இணைத் தலைமைகளுள் சில கருதுகின்றன எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே மேற்படி அவசர கூட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நியூயோர்க்கில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு ஜப்பான் சார்பில், இலங்கைக்கான அதன் விசேட சமாதான தூதர் யசூஷி அகாஷி கலந்துகொள்வார் எனத் தெரிகின்றது.

மற்றைய மூன்று தரப்புகளின் சார்பிலும் யார்,யார் பங்கு பற்றுவார்கள் என்பது இன்னும் தெரியவரவில்லை.

(அ-சி)

## சுப்பிரமணியம் பூங்கா மீண்டும் மக்கள் பாவனைக்கு அனுமதி

யாழ்ப்பாணம், செப்.19

புனரமைக்கப்பட்ட யாழ். சுப்பிரமணியம் பூங்கா நேற்றுத் தொடக்கம் பொதுமக்கள் பாவனைக்காத் திறக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபை ஆணையாளருடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்து பூங்கா பொதுமக்களின் பாவனைக்கு திறக்கப்பட்டுள்ளது என்றும் -

பொதுமக்கள் அனுமதிக் கட்டணம் ஏதுமின்றி பூங்காவுக்கு செல்ல இயலும் என்றும் - யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது. (அ-1)

## புலமைப் பரிசில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சை முடிவுகளை வெளியிடுவதற்கான பணிகள் நேற்று நள்ளிரவு வரை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன.

பரீட்சை முடிவின் பிரகாரம், தமிழ் மொழி மூல பரீட்சார்த்திகளின் வெட்டுப் புள்ளி யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கு 117 என நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன. கடந்த வருடம் யாழ்.மாவட்டத்துக்கான வெட்டுப் புள்ளி 140 ஆக இருந்தது.

## வன்னிக் கள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

"இராணுவத்தை சற்றுத்தூரம் முன்னேற விட்டு, பிறகு எமது படையணிகள் தீவிர முறியடிப்புப் பாய்ச்சலை மேற்கொண்டன. அப்போது உயிரிழந்த தமது சகாக்க சிலரது சடலங்களையும் கனரக ஆயுதங்கள் உட்பட பெருந்தொகையான படைப் பொருள்களையும் கைவிட்டுவிட்டு இராணுவத்தினர் தமது பழைய நிலைகளுக்குப் பின்வாங்கி ஓடிவிட்டனர்." என்று வன்னியிலுள்ள புலிகளின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக இராணுவத் தரப்பிலிருந்து நேற்றுமாலை வரை எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை.

இதேவேளை -

### வன்னி விளாங்குளத்தில்...

வன்னி விளாங்குளம் - மன்னகுளம் புதூர் பகுதிகளை நோக்கி பெருமெடுப்பில் முன்னேற முயன்ற இராணுவத்தினரை தமது படையணிகள் தீவிர எதிர்த்தாக்குதல் நடத்தி முறியடித்தன என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். இந்தச் சமரில் 10 இராணுவத்தினர் உயிரிழந்தனர். 8 பேர் காயமடைந்தனர் என்றும் புலிகள் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அப்பகுதியில் நகர்வை ஆரம்பித்த படையினர், நேற்றுமுன்தினம் மாலையில் அங்கிருந்து பின்வாங்கி தமது பழைய நிலைகளுக்குச் சென்றனர் என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சமரின்போது இராணுவத்தினர் கைவிட்டுச் சென்ற படைப் பொருள்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

### அக்கராயன் குளத்தில்

நாச்சிக்குடா பகுதியில் உள்ள காம்பைக் குளம் குளக்கட்டு பகுதியிலும், அக்கராயன் குளம் பிரதேசத்திலும் நேற்றுமுன் தினம் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற கடும் மோதல்களில் கொல்லப்பட்டுள்ள படையினரின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளதாக இராணுவத் தலைமையகம் நேற்று அறிவித்தது. பெரும் எண்ணிக்கையான படையினர் இதில் காயமடைந்து விட்டனர் எனத் தெரிவித்த இராணுவத் தலைமைப்பீடம், இந்தச் சண்டைகளில் 40 விடுதலைப் புலிகள் இறந்துள்ளனர் எனவும் குறிப்பிட்டது.

அதேவேளை வன்னேரிக்குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் மோட்டார் மற்றும் விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் இடங்களை இலக்கு வைத்து நேற்றுமதியம் 12 மணிக்கும், 12.30 மணிக்கும் ஜெற் மற்றும் எம்.ஐ. 24 ரக ஹெலிக் கொப்டர்கள் தாக்குதலை நடத்தின என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. (அ-சி)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்
* இணைந்த கணிதம்
09-"வட்டங்கள்"
Sat,Sun 4-6pm
Mr.K.K.கஜன், B.Sc
A/L 2010- தமிழ் I
திருவடி சூட்டு படலம்
Sat,Sun 1.00 p.m
Mr.S.சிவா,B.A.(Hons)
* சிங்களம்
* SPOKEN ENGLISH

DRUMS
வகுப்புகள் ஆரம்பம்
2nd Cross Street
NALLUR
By:-
S.MAYOORAN

LOGIC
A/L 2010
Sat, Sun- 10 a.m.
2009 பிரிவு I
Sat, Sun- 7 a.m.
2009 பிரிவு II
Sat, Sun- 11 a.m.
NEC P.கமல்

மீண்டும் யாழ் நகரில்
புவியியல்
S.R. பாலா
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2010
Sat, Sun- 9.00-10.00 a.m
A/L 2009
Sat, Sun- 10.00-11.00 a.m
Paper Class
Sat, Sun- 11.00-12.00 a.m
ஆரம்பம்:- 20.09.2008 (Sat)
NEC

கணக்கீடு
P.பகீரதன்
A/L 2009
சொத்து விற்பனை
Sat, Sun- 7.00 - 8.00 a.m
A/L 2010
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
Sat, Sun- 8.00 - 9.00 a.m
ஆரம்பம்:- 20.09.2008 (Sat)
NEC

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
இணைந்த கணிதம்
நிகழ்தகவு - 2010
Sat, Sun
பிரிவு I 12.30-2.00
பிரிவு II 2.00-3.30
தொகையீடு - 2009
Sat, Sun
3.30 - 5.00
மூலிசைகளின் சமநிலை
2009 - Day Class
Sat, Sun
5.00 - 6.30 p.m
ஆரம்பம்- 20.09.2008
By S.Sivakaran

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org